பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

மே தின
வாழ்த்துக்கள்

புதுமை : 02 | 28 ஏப்ரல் 2018 | விதி : 98



உரிமை கோரும்
குரல்களாக விரியும்
மே நாள் நிகழ்வுகள்



பேனாவும் ஆயுதமும்
ஏந்திய போராளி



அதிகாரியும்
தவ வாழ்வும்



யாழ். கோட்டை




# வெடிக்கிறது மக்கள் புரட்சி!

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



பணிநிறுத்தப் போராட்டம் காரணமாக தடைப்பட்டிருந்த விஜய் 62 படத்தின் படப்பிடிப்பு மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

ஏ.ஆர். முருகதாஸ் இயக்கும் இந்தப் படத்தை தீபாவளிக்கு வெளியீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் படத்தில் கீர்த்தி சுரேஷ் நாயகியாக நடிக்கிறார். வரலட்சுமி முக்கிய வேடத்தில் நடிக்கிறார். இந்தப் படம் அரசியல் - சமூக கருத்துக்களை வலியுறுத்தி எடுக்கப்படுகின்றது.



தற்போது செல்
நடித்துவரும் சூர்
இயக்கத்தில் நடிக்
லைகா நிறுவன
படத்தில் எழுத்தா
பிரபாகர், இசைய
ஜெயராஜ் ஆகியே
பணியாற்றவுள்ளா
உத்தியோகபூர்வப
ஆனந்தின் இய
மாற்றான் ஆகிய ப
என்பதும் குறிப்பி





பிரசன்னா, ஆன்ட்ரியா, மடோனா செபஸ்ரியன் இணையும் படத்தை இயக்குகிறார் பாலாஜி குமார்.

'சொல்லாதே யாரும் கேட்டால்' என தற்காலிகமாகப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்தின் படப்பிடிப்பு ஜூலையில் தொடங்குகிறது.

ஒரு நாவலைத் தழுவியே இந்தப் படத்தின் கதை எழுதப்பட்டுள்ளதாம்.



தமிழ்ச் சினிமாவில் தொடர்ந்த பணிப் புறக்கணிப்பால் பொழுதைக் கழிக்க நடிகர், நடிகைகள் பலரும் வெளிநாடுகளுக்கு பறந்தனர்.

ஆனால் பிந்துமாதவியோ ஆந்திராவில் உள்ள தனது சொந்தக் கிராமத்துக்கு சென்றுள்ளார். அசல் கிராமத்துப் பெண்ணாக மாறி வயல் வெளியில் ஆடு மேய்த்தல், அடுப்பில் விறகு மூட்டி சமைத்தல், நீர்ப்பாசன நீரில் குளிப்பு என பொழுதுபோக்கியுள்ளார்.

அவரின் கிராமத்துப் படங்கள்தான் தற்போது சமூகவலைத்தளங்களில் வைரலாகியுள்ளன.

சுப்ரமணியபுரம் படம் மூலம் அறிமுகமானவர் சுவாதி. பல படங்களில் நடித்த போதிலும் கவர்ச்சி காட்ட மறுத்துவிட்டார். இதனால் பலரும் அவரைக் கண்டுகொள்ளவில்லை.

பட வாய்ப்புகள் இல்லாததால் கவர்ச்சி காட்டத் துணிந்தார். ஆனால் எந்த இயக்குநரும் அவருக்கு வாய்ப்பு அளிக்கவில்லை.

இந்நிலையில் வழக்கமாகப் பிறந்தநாள் கொண்டாடாதவர், இம்முறை பிறந்த நாளுக்கு விருந்தளித்துள்ளார். பட வாய்ப்புகளைக் கவரத்தான் இந்த விருந்து என்கிறார்கள்.

புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 02 | 28 ஏப்ரல் 2018 | விதி : 98

# பௌத்தத்துக்கு முதலிடம்! ஏற்ற பின் என்ன மே தினம்?

## பொங்கியெழுந்த சிங்கள மாணவர்கள்

கடந்த 23ஆம் நாளன்று யாழ். பல்கலைக்கழகத்தில் வவுனியா வளாகத்தில் சிங்கள மாணவர்கள் புத்தர் சிலை ஒன்றை நிறுவ முற்பட்டபோது தமிழ் மாணவர்களால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. அந்த நிலையில் அங்கு ஏற்பட்ட முறுகல்நிலையை அடுத்து, பல்கலைக்கழக நிர்வாகம் தலையிட்டு புத்தர் சிலை நிர்மாணத்தைத் தடுத்து நிறுத்தியது.

இதையடுத்து சிங்கள மாணவர்கள் பணியகத்தைச் சுற்றிவளைத்துப் பணியாளர்களை வெளியேறவிடாது பலவந்தமாகத் தடுத்து வைத்தனர். இந்த விடயம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அவர்கள் அங்கு வந்து சிங்கள மாணவர்களுக்கு அறிவுரைகூறிப் பணியாளர்களை விடுவித்தனர்.

இந்தச் சம்பவம் காரணமாக பல்கலைக்கழக வளாகம் காலவரையறையின்றி மூடப்பட்டதுடன், மாணவ, மாணவியரை விடுதிகளிலிருந்து வெளியேறும் படியும் பணிக்கப்பட்டது.

**தலையிருக்க வாலாடும் பயங்கரவாதம்**

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா வளாகத்தின் இரண்டாம் வருட மாணவர் ஒருவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, அவர் தற்சமயம் இடம்பெற்றுவரும் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்ததும் நிர்வாகம் ஒவ்வொரு மாதத்துக்குரிய வழிபாட்டு ஸ்தலங்களை அமைத்துத் தருவதாக வாக்களித்திருந்ததாகவும், அந்த நிலையில் புத்தர் சிலை மட்டும் அமைக்கப்படுவது குழப்பங்களை ஏற்படுத்தும் என்பதால் தாம் அதை நிறுத்தும்படி கேட்டுக் கொண்டதாகவும், அதனால் முறுகல் நிலை ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் சிங்கள மாணவர்கள் தங்களிடம் சம்பந்தர், சுமந்திரன் போன்ற தமிழ்த் தலைவர்களும், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் போன்ற முஸ்லிம் தலைவர்களும் பௌத்தத்துக்கு முதலிடம் என்பதை அரசியலமைப்பு ரீதியாக ஏற்றுக்கொண்ட பின்பு அங்கு புத்த வழிபாட்டிடம் அமைப்பதை எதிர்ப்பது பயங்கரவாதம் எனவும், தலையிருக்க வாலாடும் இனவாதம் எனவும் தெரிவித்து தங்களை மிரட்டியதாகவும் தெரிவித்தார்.

**காலவரையறையற்ற ஒத்திவைப்பும் ஏமாற்றமும்**

இந்தமுறை முதலாம் ஆண்டில் இணைந்து கொண்ட மாணவிகள் சிலர் இது பற்றிக் கருத்து வெளியிடும்போது, சில மணி நேரம் அங்கு பெரும் பதற்றமான சூழ்நிலை நிலவியதாகவும், தங்களைச் சில சிங்கள மாணவர்கள் புரியாத மொழியில் திட்டியதாகவும், தாம் பெரிதும் அச்சமடைந்திருந்ததாகவும் தெரிவித்ததுடன் தாம் பல்கலைக்கழகம் பற்றிய கனவுகளுடன் வந்ததாகவும், ஆரம்பத்திலேயே விரும்பத்தகாத சூழல் ஏற்பட்டுக் கல்வி நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டமை ஏமாற்றமளிப்பதாகவும் கூறினர்.

**வெசாக்கில் மே தினம் அப்பட்டமான தேசத் துரோகம்**

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இடதுசாரிச் சிந்தனையுள்ள ஒரு விரிவுரையாளரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, அவர் தன்னிடம் சில சிங்கள மாணவிகள் தாங்கள் பல்கலைக்கழகத்தில் வெசாக் தினம் கொண்டாடவுள்ளதாகவும், அதில் தன்னைக் கலந்துகொள்ளும்படி கேட்டதாகவும், அப்போது தான் மே தினக் கூட்டமொன்றில் உரையாற்ற வேண்டியுள்ளதால் தனக்கு நேரமில்லை எனத் தெரிவித்ததாகக் கூறினார். அவர் மேலும் ஒரு மாணவி கோபமாக இலங்கையில் பௌத்தத்துக்கு முதலிடம் என்பதைத் தமிழ்த் தலைவர்களே ஏற்றுள்ள நிலையில், அதில் கலந்து கொள்ளாமல் வெளிநாட்டினரின் கொண்டாட்டமான மே தினத்தில் கலந்துகொள்வது தேசத் துரோகமெனச் சீறியதாகவும் தெரிவித்தார்.

மே தினத்தின் பெருமையை உணர முடியாதளவுக்கு சிங்கள பௌத்த பேரினவாதம் சிங்கள மாணவர் சமூகத்தின் மண்டையைக் கழுவி வைத்திருப்பதை எண்ணி அழுவதா? சிரிப்பதா? எனத் தெரியவில்லை எனவும் தெரிவித்தார்.

**இளகிய இரும்பைக் கண்டால் சம்மட்டி மூசிமூசி அடிக்குமாம்.**

---

# சிறுமியை வன்புணர்ந்தால் தூக்கு! தண்டனை பிரகடன நாளில் 13 வல்லுறவுகள்

இந்தியாவில் 12 வயதுக்குக் குறைந்த சிறுமிகளைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்படுபவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, நிறைவேற்றப்படவேண்டுமென நரேந்திரமோடி தலைமையிலான பாரதீய ஜனதா கட்சியின் இந்திய மத்திய அமைச்சரவை தீர்மானித்துள்ளது. மேலும் அந்த வழக்குகள் 3 மாதங்களுக்குள் விசாரித்து முடித்து தண்டனை வழங்கப்படவேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் பாலியல் வன்புணர்வு தொடர்பான குற்றங்கள் அடிக்கடி இடம்பெற்றுவருவது நாளாந்தம் வெளிவரும் செய்திகள். இதில் முதியோர், குடும்பப் பெண்கள், கன்னியர், சிறுமியர், குழந்தைகள் என எந்தந்த தரப்பும் தப்ப விடப்படுவதில்லை.

இந்தியா உயர்ந்த பண்பாட்டைக் கொண்ட நாடு எனவும், பெண்களைத் தெய்வமாகவும், தாயாகவும் போற்றும் நாடு என்பன போன்ற கொக்கரிப்புகளுக்குப் பஞ்சமில்லை. திருமணத்துக்கு முன்பாகப் பெண்கள் பாலியல் உறவில் ஈடுபடுவதில் தவறவில்லை என நடிகை குஷ்பு கூறிவிட்டார் என்பதற்காக பண்பாட்டுக் காவலர்களும்,ஊடகங்களும் அவரைப்போட்டு உருட்டி எடுத்துவிட்டனர். ஆளுநர் ஒரு பெண் நிருபரின் கன்னத்தில் தட்டிவிட்டார் என்பதற்காக கண்ணகிகளெல்லாரும் வரிந்து கட்டிக் கொண்டு வாள் தூக்கிவிட்டனர்.

அப்படியான போலிப் பெருமைகளைக் கட்டியெழுப்பியுள்ள இந்திய மண்ணில்தான் அடுத்தடுத்து சிறுமியர் வன்புணர்வுக் கொலைகள் இடம்பெறுகின்றன. இத்தகைய மிருகங்கள் கூடச் செய்யாத காம விகாரத்தின் பின்னால் சாதி ஒடுக்குமுறை, மத ஒடுக்குமுறை என்ற இந்துத்துவ மேலாதிக்க வக்கிரங்கள் இருக்கின்றன என்பதுதான் உண்மைநிலை.


ஆட்சியிலிருக்கும் பாரதீய ஜனதா கட்சி இத்தகைய இந்துத்துவ ஒடுக்குமுறைகளின் தலைமைப் பிரதிநிதி. முஸ்லிம்களின் "பாபா" மசூதி இடித்தலில், புகழ் பெற்ற இராம பக்தர்கள் நரேந்திரமோடி உயர் மட்ட இந்துத்துவ பிரமச்சாரி. எத்தனை கடுமையான தண்டனைகள் பிரகடனம் செய்யப்பட்டபோதும் இந்த ஒடுக்குமுறை அமைப்பு தகர்க்கப்படும் வரை இத்தகைய குற்றங்களைத் தடுக்க முடியாது.

இந்தத் தண்டனை பிரகடனப்படுத்தப்பட்ட அன்றே 13 சிறுமியர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அப்படியானால் தூக்குத் தண்டனையின் பெறுமதி என்ன?

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்




எவ்வள்வு வயசானாலும் இந்த கார்ட்டுன் பார்க்குற பழக்கம் மட்டும் இன்னும் போகமாட்டேன்கிறது!



வீட்டுக்கு வந்த நண்பர் டிவில அனிமல் பிளானட் சானல் ஓடிக்கிட்டு இருந்தத பாத்துட்டு " இதெல்லாம் எப்படி பாக்கறீங்க"ன்னு கேட்டார்.

"நீங்க என்ன பாப்பீங்க"ன்னு கேட்டேன்.

/siringa.pls

"சீரியல்"னு சொன்னார்

"நாங்க விலங்குகள் விலங்குத்தனமா நடக்குறத பாக்குறோம்...நீங்க மனிதர்கள் விலங்குத்தனமா நடக்குறத பாக்குறீங்க, அவ்ளவுதான் வித்தியாசம்"னு சொன்னேன்...

## பிரியாணியின் பிறப்பிடம் எது!





கிட்சன் சார்

ஒரு சிலர் எங்க படுத்தாலும் அசந்து தூங்கிடுறாங்க! எப்படின்னு தெரியல.




நமக்கு ஆபிஸ்ல லன்ச்சிக்கு அப்பறம்தான் தூக்கம் தள்ளுது.

சிலர் ஆயிரக்கணக்குல காசு கொடுத்து ஹேர் ஸ்டைல் வைக்கிறாங்க...ஆனா




எனக்கு தூங்கி காலைல எந்திரிக்கும்போது தினமும் ஒரு புது ஸ்டைல் வருது! நான்தான் அத வெளிய காட்டிக்கிறது இல்ல!

வடைய பிய்க்கும்போது இப்படி நூல் நூலா வந்தா சாப்பிடுவோமா... பிஸ்ஸாவ மட்டும் எப்படி சாப்பிடறாங்க...ச்சே!





கொளுத்தி போடுவோம்...



💰பர்ஸ்ல உள்ள காசு எல்லாம் புடுங்கிட்டு,
ஒரு புது காலி பர்ஸ் கொடுப்பான் பாரு...
அவன்தான் நகை கடைக்காரன்😆

இந்த பெண்கள் மணிக்கணக்கில் சமயல் நிகழ்ச்சிகளை பாத்துட்டு ஆண்கள பார்த்து மனசாட்சியே இல்லாம ஒரு கேள்வி கேப்பாங்க...பாருங்க...





"இன்னக்கி என்ன சமைக்கட்டும்"

சின்ன வயசுல நம்மகிட்ட சில்லறை காசு இருந்தா சாக்லேட் வாங்கி தின்போம்.




இப்ப கடைக்காரன்கிட்ட சில்லரை காசு இல்லைனா நாம சாக்லேட் திங்க வேண்டியதாயிருக்கு ...

## ஏம்மா இப்படி...




"நாங்க கல்யாணத்துக்கு முன் டெய்லரிங் கிளாஸ் சேருவதே வரப்போகும் கணவனை மிதிக்க பயிற்சி எடுக்கத்தான்."

## பாவம் ஆண்கள்...



புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## இனியும் தாமதிக்கலாமா?

**போர்**க் காலத்தில் கைது செய்யப்பட்டு கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்ட பல தமிழர்கள் கொலை செய்யப்பட்டு விட்டனர். அவர்களை அடித்தும், கத்தியால் குத்தியும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கி வயர் அல்லது கயிற்றால் கழுத்தை நெரித்தும் கொலை செய்தோம் என இராணுவ விசாரணை அதிகாரி ஒருவர் வாக்கு மூலம் அளித்திருக்கிறார் "சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம்" அமைப்பிடம்.

இந்த அமைப்பின் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா வெளியிட்ட அறிக்கையில் 'தமிழர்களை சித்திரவதைகளுக்கு உள்ளாக்கிய, கொலை மற்றும் பாலியல் வன்புணர்வுகளில் ஈடுபட்ட சுமார் 50 விசேட அதிரடிப் படையினரின் பெயர் விவரங்களை வாக்கு மூலம் அளித்த இராணுவ அதிகாரி வழங்கினார்" என்று உறுதிப் படுத்தியுள்ளார். அவரின் இந்த உறுதிப்படுத்தல் அந்த அதிகாரி போன்று எத்தனை பேர் இன்னமும் உள்ளார்கள் என்ற கேள்வியை எழுப்பத் தோன்றுகிறது.

ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்றும் இலங்கை இராணு வத்தினர் பணியாற்றும் நாடுகளில் பல்வேறு மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களில் பலர் இறுதிப் போரில் பங்கேற்றவர்கள் எனக் கூறப்படுகின்றது. இவ்வாறான இராணுவ அதிகாரிகளை வெளியேற்றும் நடவடிக்கைகளை ஐ.நா. மேற்கொள் கிறது. இவர்களுக்கு தண்டனைகளை வழங்குவதற்காக செயற்றிட் டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

இறுதிப் போரில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல், போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களின் விவரங்கள் வெளிநாடுகளில் இருக்கும் அதிகாரிகளால் தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளன. இவை தொடர்பில் விசாரிப்பதற்கான பொறிமுறையை இன்னமும் இலங்கை அரசு நிறுவவில்லை. அது தொடர்பான எண்ணமும் அதற்கில்லை. இந்த விடயம் தொடர்பில் சர்வதேசமும் கண் மூடி இருப்பதாகவே தெரிகிறது. மனித உரிமைகள் மீறல், போர் குற்றங்கள் தொடர்பில் விசாரிக்கவென சர்வதேசப் பொறிமுறையின் அவசியத்தை எழிலன் உட்பட மூவரின் ஆட்கொணர்வு மனு மீதான வழக்கு உணர்த்தியுள்ளது.

இனப் பிரச்சினை தொடர்பான விடயங்களில் உள்ளக நீதி யில் தமிழர்கள் ஒருபோதும் நம்பிக்கை வைத்ததில்லை. சர்வ தேசத்தையே நம்பினர். ஆனால் அது தொடர்பில் சர்வதேசம் கள்ள மௌனம் சாதித்து வருவது தமிழர்களை போராடச் செய்துள்ளது. வெளியாகும் அறிக்கைகளும் தீர்ப்புகளும் விசாரணைகளை தாமதித்து நீளும் வருடங்களும் தமக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை தமிழர்களிடம் சிதைத்து வருகின்றது. தமிழர் களுக்கான நீதி தாமதிப்பு, அரச செல்வாக்குகளால் தமிழர் கள் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுவதும், கைது செய்யப்படு வதும், தாக்கப்படுவதுமான சம்பவங்கள் இன்றும் நடந்தேறிக் கொண்டு உள்ளன.

மேலும், தமிழர்களின் நிலங்களில் வலிந்து சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துதல், தமிழர்களின் பாரம்பரிய நிலங்களில் இருந்து அவர்களை விரட்டுதல், தமிழர்களின் இன, மத அடையாளங்களை அழித்தல் என உள்நாட்டுப் பிரச்சினை வெடிப்பதற்கு மூல காரணங்களாக அமைந்தவையே மீண்டும் ஈழத்தில் அரங்கேறத் தொடங்கியுள்ளன. இவை இனியும் நீதி தாமதிக்கப்படக்கூடாது என்பதற்குக் கட்டியம் கூறி நிற்கிறது. இனி யும் சர்வதேசம் தாமதிக்கலாமா?

யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!

# கலிங்கு - நவீன போர் இலக்கியம்




"சமாதானக் காலத்தில் மகன்கள் தந்தைகளைப் புதைக்கிறார்கள். யுத்தகாலத்தில் தந்தைகள் மகன்களைப் புதைக்கிறார்கள்" யுத்தத்தில் தோய்ந்த ஐரோப்பாவின் வாசகம் இது. இந்த வாசகத்தைக் 'கலிங்கு' நாவலுக்கான பகுதிப் பொழிப்புரையாகச் சொல்ல லாம். யுத்தத்துக்குப் பிறகான காலங் களைப் பற்றி வாசகங்கள் எதுவுமில்லை. எம்.ஏ.நுஃமான் 1977லில் எழுதிய 'நேற்றைய மாலையும் இன்றைய காலையும்' என்ற கவிதையை இந்த நாவலின் பொழிப்புரை என்று சொல்லலாம்.

இந்நூல் முத்தரப்பைச் சார்பில்லாமல் பேசுகிறது 644 பக்கங்கள் கொண்ட இந்த நாவல், முதல் பார்வையில் ஒரு தயக்கத்தை ஏற்படுத்தவே செய்கிறது. அது 'கலிங்கு' நாவலின் குற்றமல்ல. தமிழில் தடித்த நாவல்கள் செய்த குற்றம். 2000 ஆம் ஆண்டளவில் தமிழ் இலக்கியத்தில் சிறுகதைகள் எழுதிக்கொண்டிருப்பவர் அல்லது நாவலை எழுத முயல்பவர் என யாரைக் கேட்டாலும் 2000-3000 பக்க அளவில் ஒரு நாவல் எழுதப்போவதாக சொல்வது மிகச் சாதாரணமாய் இருந்தது. தமிழ் நாவலில் ஒபிசிட்டி கூடிய காலமது. சொன்னதில் பெரும்பான்மையினர் எழுதவில்லை. பாண்டியராஜனின் 'ஆண்பாவம்' படத்தில் இரண்டாயிரம் நாலாயிரம் எனச் சொல்லி தலைகோதுவார்களே, அப்படியாக அந்த துர்கனவு இனிதே முடிந்தது.

எழுதப்பட்ட தடித்த நாவல்களில் மிகச் சிலவே வென்றன. மற்றவை காட்டை அழித்த கணக்கில் சேர்ந்தன. எழுதியவர்களும் முடித்த கையோடு வனப்பிரஸ்தம் புறப்பட்டுவிட்டார்கள். மூவாயிரம் பக்கத்தில் வாழ்வை நீட்டி நீட்டிச் சொன்ன பிறகு வாழ்வதற்கு என்ன இருக்கிறது?

இந்நாவல் யுத்த காலத்தையும், யுத்தத்துக்குப் பிறகான காலத்தையும் பேசும் நாவலாக இருக்கின்ற அதே வேளை நமக்கு வாசிப்பு அனுபவத்தையும் தரக்கூடிய ஒன்றாகவே இருக்கிறது. நான் வாசிப்பு இன்பத்தை சொல்லவில்லை.

2003 முதல் 2015 வரை நாவலின் காலம் என வரையறுத்துக் கொண்டாலும் சாமி, குசுமவதி, பந்துல, பரஞ்ஜோதி போன்ற பாத்திரங்களின் வழி 70, 80 ஆண்டுகள் பின்னோக்கியும் போகிறது.

தமிழ், சிங்களம், இடதுசாரி இயக்கமான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) என முத்தரப்பையும் சார்பில் லாமல் பேசுகிறது. முத்தரப்பையும் பேசுவ தால் மட்டுமே இது முக்கியமான நாவலாக ஆகவில்லை. நாவல் முழுக்க ஒரு பதற்றம் இருக்கிறது.

மனிதர்கள் இரவுக்குள் வீடு போய்ச் சேர்ந்து விட முடியுமா என்கிற பதற்றத்து டனேயே அலைகிறார்கள். யுத்த காலத்தில் இன்றிரவை உயிரோடு கடந்து விடுவோமா என்ற பதற்றத்தோடும், யுத்தத்துக்குப் பின் வீடு போய்ச் சேருவோமா என்ற பதற்றத்தோடும் மனிதர்கள் அலைகிறார்கள். அந்தப் பதற்றம் நம் மீதும் கவிகிறது.

**தகவல்களின் வழி கட்டப்பட்ட நாவல்**

கூரிய அவதானிப்பின் வழியும், வசீகரமான மொழியின் வழியும் நாவல் நம்மை ஈர்க்கிறது. நுண்மையான தகவல்களின் வழி கட்டப் பட்டது இந்நாவல். கள்ளிக் கோட்டை ஓடு, கும்பகோணத் திலிருந்து போன நடன மங்கை ஜெகதாம் பிகை, சிங்களம், தமிழ், தெலுங்கு கலந்த வேட்டுவர்களின் பாஷை. மதுரை தமிழ் சங்கத்துக்குக் கூட்டமாகப் படிக்கப்போகும் புலவர் கள். மதுரை மீனாட்சியம் மனை தோணி எடுத்துப்போய் வழிபட்டு வரும் ஆச்சிகள், ஈழ மின்னல், மலையாள மின்னல். சுதந்திரமடைந்த காலத்தில் 78 சதவீதமாய் இருந்த வனம் இன்றைக்கு 20 சதவீதமாய் சுருங்கி இருப்பது, யாழ்ப்பாணம், வன்னிப்பிரதேச வித்தியா சங்கள், புத்த பிக்குகளுக்கு என பேருந் தில் தனி இருக்கை, புத்த பிக்கு ஆகும் சடங்கு. முதலியார் முதலியாக மாறுவது. வட்டில் அப்பம். 1900களின் ஈழ நூல்கள் சென்னையில் அச்சாவது போன்ற நுண் கலாசார தகவல்கள் நாவலை மேலும் நுட்பமாக்குகின்றன.

**வசீகரமான மொழி**

"இரகசியம் பேச பார் வசதியான இடம். முப்பது மேசைகளும் தனி உலகங்களாக இருக்கும். கோல்பேஸ் திடலில் நின்றிருக்கையில் இந்துமகா சமுத்திரத்தின் இரைச்சல், அந்த மேசையில் இருப்பவர்கள் அந்தந்த உலகத்துவாசிகளாக மட்டுமே இருப்பார்கள்."

"அவன் அந்த அரசியலைப் பொறுத்தவரை ஒரு மீனைப்போலவே இருந்தான். அதிலிருந்து வெளியே தூக்கிப்போட்டால் வாழமுடியாதவனாக இருந்தான்."

"காலம் வேவுகளின் கொடுங்கரங்கள் பற்றியதாய் இருக்கிறது. யார் யாரை காட்டிக்கொடுப்பர் என்று நிறுதிட்ட மான வரைவுகள் ஏதுமில்லை."

**துயர்மிகு மாந்தர்களின் பயணம்**

யுத்தமும், யுத்தத்துக்குப் பின் னான பதைபதைப்பான வாழ்வும் அந்த பதைபதைப்பிலிருந்து மீள முடியாத மாந்தர்களைச் சுற்றியே மொத்த நாவலும் இயங்குகிறது. இயக்கத்திலிருந்தோர், வெளிவந்தோர், அலையும் தாய்கள், காட்டிக்கொடுப்போர், மாற்று இயக்கத்துக்கு பயந்து 17 ஆண்டுகள் தலைமறைவாய் இருப்போர், வெள்ளை வான், காணாமல் ஆக்கப்பட்டவர்களைப் பத்தாண்டுகளாய்த் தேடி அலைவோர், மௌனமாய்ப்போன குழந்தைகள், ரசாயன ஆயுதத்தால் உருகிப்போனவர்கள், குற்றஉணர்ச்சியின் நிழலில் வாழ்கிறவர்கள் என பல்வேறு மனிதர்களோடு பயணிக்கிறது நாவல்.

ஷெல் தாக்குதலில் கால் போன சின்னப் பிள்ளையான ஜெனேட், தன் காலைப் பார்த்து அழும்போதெல்லாம் அவள் அம்மா, "அழாதே நீ பெரிய பிள்ளை ஆகும்போது கால் முளைத்திடும்" என்பாள்.

நாம் மீண்டும் கால் முளைத்திடும் என்று நம்பவேண்டியதில்லை, வாழ்வு முளைக்கவே விரும்புகிறோம்.

**- சாம்ராஜ், கவிஞர்.**

# உரிமை கோரும் குரல்களாக விரியும் மே நாள் நிகழ்வுகள்

■ யோக நாராயணன்

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் ஏற்பட்ட துரிதமான தொழில் வளர்ச்சி காரணமாக தொழிலாளி வர்க்கம் என்றொரு புதிய சமூக வர்க்கம் உருவாகியது. ஏனைய உழைக்கும் மக்களைப் போன்றே இதுவும் கொடுமையாகச் சுரண்டப்பட்டும், ஒடுக்கப்பட்டும் வதைப்படுத்தப்பட்டபோதும் இது விஞ்ஞான யுகத்தின் உற்பத்தி என்ற வகையில் ஏனைய வர்க்கங்களைவிடத் தீவிரமானதும், புரட்சிகரமானதுமாயிருந்தது. தொழிற்சாலைகளே ஏராளமானோரை ஒரே இடத்தில் கூட்டி, ஒரே விதமாகச் சுரண்டியதான தொழிலாளி வர்க்கம் இலகுவில் ஐக்கியப்படும் தன்மை கொண்டதும், அநீதிகளுக்கு எதிராகப் போராடும் தன்மை கொண்டதுமாக விளங்கியது.

ஆரம்ப காலத்தில் 12 முதல் 18 மணித்தியாலம் வரை வேலை வாங்கப்பட்ட தொழிலாளர்கள் 10 மணிநேர வேலை கோரிப் போராட ஆரம்பித்தனர். இந்தப் போராட்டங்கள் கொடிய ஒடுக்குமுறைகள் மத்தியிலும் - இங்கிலாந்து, பிரான்ஸ், அவுஸ்ரேலியா, ரஷ்யா, அமெரிக்காவின் பிரதான நகரங்கள் எனப் பல நாடுகளுக்கும் பரவின். பல்வேறு நாடுகளில் நெசவு, தச்சுத் தொழில், இயந்திர உற்பத்தி போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபட்ட தொழிலாளர் முதலில் தங்கள் நிறுவனங்களின் நிர்வாகங்களுடனேயே போராட்டங்களை நடத்தினர். எனினும் காலப்போக்கில் தொழிலாளர்கள் தம்மை நாடு பரந்த அமைப்புகளாகவும், நாடு கடந்த ஒன்றிணையும் அமைப்புக்களாகவும் மாற்றிக்கொண்டனர்.

இந்த வகையில் அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து அமெரிக்கத் தொழிலாளர் கூட்டமைப்பு என்ற அமைப்பை உருவாக்கினர். அது 1886 மே முதலாம் நாள் 8மணி நேர வேலை கோரி நாடு பரந்த வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு அறைகூவல் விடுத்தது. ஏறக்குறைய 3,50,000 பேர் கலந்து கொண்ட இந்தப் போராட்டம் முழு அமெரிக்காவையுமே நிலை குலைய வைத்தது. 1,200 நிறுவனங்களின் பணியாளர்கள் பங்கு கொண்டனர்.

அன்று சிக்காக்கோ நகரில் இடம்பெற்ற தொழிலாளர் பேரணி மீது பொலிஸாரும், குண்டர்களும் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 4 தொழிலாளர்கள் உயிரிழக்கின்றனர். பலர் காயமடைகின்றனர். தொழிலாளர்கள் வீழ்ந்துபோன தங்கள் தோழர்களின் குருதியில் கொடிகளைத் தோய்த்துச் செங்கொடிகளாக்கிப் போராட்டத்தைத் தொடர்கின்றனர். நான்காம் நாள் ஹெமர் கட் சதுக்கத்தில் இடம்பெற்ற கண்டனப் பொதுக் கூட்டத்தின் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 7பேர் கொல்லப்படுகின்றனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைகின்றனர். தொழிலாளர் தலைவர்கள் 7பேர் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்படுகின்றனர்.



1891இல் உலகத் தொழிலர்ளர்களின் இரண்டாவது அகிலத்தின் இரண்டாவது மாநாட்டில் மே முதல் நாள் தொழிலாளர் தினமாகப் பிரகடனம் செய்யப்படுகிறது.

தற்சமயம் மே நாள் உலகப் பட்டாளிவர்க்கத்தின் வெற்றித் திருநாளாக உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

ஏற்கனவே ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்ரேலிய நாடுகளில் இடம்பெற்ற போராட்டங்களின் கூர்முனையாக சிக்காக்கோவில் மேநாள் போராட்டம் எழுச்சி பெற்றது. அது ஒரு தனிப் போராட்டமல்ல! பல போராட்டங்கள் ஏற்படுத்திய எழுச்சி ஒன்று, இரண்டு பேரெழுச்சியாகப் பரிணமித்த ஒரு வரலாற்று நிகழ்வு.

அந்தப் போராட்டம் ஏற்படுத்திய அதிர்வலைகள் உழைக்கும் மக்களின் 8மணிநேர உட்பட ஏனைய பல உரிமைகளையும் வென்றெடுத்தன. அது மட்டுமின்றி சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சீனா, வியட்நாம், கியூபா, வடகொரியா எனப் பல நாடுகளில் முதலாளித்துவ சமூகக் கட்டமைப்பு மாற்றப்பட்டு உழைக்கும் மக்களின் அரசியலதிகாரம் நிறுவப்பட்டது.

**தமிழ் மக்களும் மே தினமும்**

1886இல் இடம்பெற்ற மே நாள் எழுச்சியில் 8 மணிநேர வேலை பிரதான கோஷமாக முன்வைக்கப்பட்டபோதிலும்கூட அது தொடர்ந்து சகலவிதமான ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான பிரகடனமாகவே விளங்குகிறது.

இன, ஒடுக்குமுறை என்பதுகூட வர்க்க ஒடுக்குமுறையின் இன்னொரு வடிவமாகவே காணப்படுகிறது. ஆளும் வர்க்கங்கள் இனத்தின் பேராலும், மதத்தின் பேராலும் தமது ஒடுக்குமுறை நடவடிக்கைகளையும், சுரண்டலையும் தாம் சார்ந்த இனத்தின் மத்தியின் நியாயப்படுத்தி வருகின்றனர்.

எனவே எமது விடுதலைப் போராட்டமும் உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் ஒரு பகுதியாகவே வெடித்தெழுந்தது. எமது போராட்டம் விடுதலைப் பிரதேசங்களை உருவாக்குவதிலும், தமிழ் மக்களுக்கென அந்தப் பகுதிகளில் அரசியலதிகாரத்தை நிறுவுவதிலும் பல சாதனைகளை ஈட்டியது.

எனினும் துரதிஷ்டவசமாக சர்வதேச மேலதிக்க சக்திகளின் கூட்டுச் சதியால் எமது ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டது. இந்த நிலையில் தமிழ் மக்களின் தலைமை முதலாளித்துவ நாடாளுமன்ற அரசியல் சக்திகளிடம் கைமாறியது. இன்று தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவதாகச் சொல்லிக்கொள்ளும் தமிழ்த் தலைமைகள் ஆளும் தரப்புடன் சமரசம் செய்து கொள்வதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. அவர்கள் தமது வர்க்க நலன்களின் அடிப்படையில் அதற்கு ஊறுவிளைவிக்காத வகையில் எமது உரிமைப் போராட்டத்தை திசை திருப்பிக் கொண்டு செல்வதிலேயே அக்கறையாயிருப்பார்கள்.

எனவே நான் இன்றைய தமிழ்த் தலைமைகள் இந்தியப் பிராந்திய மேலாதிக்கத்துக்கும், சர்வதேச ஏகாதிபத்திய நலன்களுக்கும் இனசாந்தவாறே எமது உரிமைப் போராட்டத்தை தீவிரமற்ற, மந்தமான, சமரச அடிப்படையிலான ஒரு நகர்வாக மேற்கொண்டு வருகின்றனர். அதன் காரண்மாகவே காணிகள் விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகள் விடுதலை போன்ற விடயங்களில் மக்கள் போராட்டங்கள் ஒரு வருடத்தைத் தாண்டி இடம்பெற்று வருகின்றபோதிலும் - அவற்றை ஒருமுகப்படுத்தித் தலைமையேற்று முன் கொண்டு செல்ல தமிழ்த் தலைமைகள் தயாரில்லை. வெறும் அறிக்கைகளை வெளியிட்டு மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் - 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் எவ்வாறு ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க நகரங்கள், அவுஸ்ரேலியா போன்ற பகுதிகளில் போராட்டங்கள் வெடித்தனவோ அவ்வாறே கோப்பாபிலவு, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் மக்கள் போராட்டங்கள் வெடித்துத் தொய்வின்றித் தொடர்கின்றன. ஒருவருடம் கடந்துவிட்ட நிலையில் இரணைதீவு மக்களின் போராட்டம் புதிய பரிணாமத்தை எட்டியுள்ளது. பிற்போக்குத்தனமான சமரச தலைமைகளைப் புறந்தள்ளி மக்கள் போராட்டங்கள் தொடர்கின்றன.

எவ்வாறு அன்றைய நாட்களில் வெடித்த போராட்டங்கள் மே தினமாகப் பரிணமித்து ஒரு உயர் நிலையை எட்டிப் பல சாதனைகளுக்கு வழி வகுத்ததோ, அவ்வாறே எமது மக்களின் உறுதியான போராட்டங்களும் ஒரு சாதனைக் களமாக விரிவடையும். பல்வேறு இடங்களில் எழுச்சி பெறும் போராட்டங்களை - ஒடுக்குமுறைகள் இயல்பாகவே ஒன்றிணைய வைக்கின்றன. அப்படி அவை ஒன்றிணையும்போது எவ்வளவு வலிமையான எதிரிகளாலோ, எம்மவர் போல்நடிக்கும் வேடதாரிகளாலோ தடுத்துவிட முடியாது.

காணிவிடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் போன்ற பிரச்சினைகளில் தொடரும் உறுதியான போராட்டங்கள் இரண்டு வருட மே தினங்களைக் கண்டுவிட்டது. இவற்றில் செங்கொடிகள் இல்லை, கோஷங்கள் இல்லை, பிரமாண்டமான பேரணிகள் இல்லை. ஆனால் இவை உலகப் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் ஒரு பகுதியாகவே திகழ்கின்றன. எனவே மே நாள் உணர்வு மேலும் எமது மக்களின் போராட்டங்களை உத்வேகப்படுத்தி வெற்றியை நோக்கி நகர்த்தும் என்பது மட்டும் திண்ணம்.

# வெடிக்கிறது மக்கள் புரட்சி

■ நிலவன்

'மக்கள் புரட்சி வெடிக்கட்டும்: சுதந்திர தமிழீழத் தாயகம் மலரட்டும்" இந்த வரிகள் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக நீரையும் உணவையும் துறந்து தன்னை உருக்கிய தியாகி லெப். கேணல் திலீபனின் வாயில் இருந்து உதிர்ந்தவை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்தவர் லெப்.கேணல் திலீபன். ஆயுதப் போராட்டத்துடன் மக்களின் எழுச்சிப் போராட்டமும் இணைந்தால்தான் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என நம்பியவர் தலைவர் பிரபாகரன். தலைவரின் கொள்கைகளுக்கு செயல்வடிவம் கொடுத்தவர் தியாகி திலீபன். இதனால்தான் பட்டினித் தீயில் தன்னை எரித்துக் கொண்டிருந்த திலீபன் அந்த நிலையிலும் 'மக்கள் புரட்சி வெடிக்கட்டும்' என்று எழுச்சியை ஏற்படுத்தினார்.

ஆனாலும் ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற மக்கள் அதையே முழுமையாக நம்ப ஆரம்பித்தனர். ஆயுதப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் விதமாக மக்கள் பொங்கி எழுந்து 'பொங்குதமிழ்' நிகழ்வை நடத்தினர். ஆனால் இந்தப் போராட்டங்கள் அனைத்தும் ஆயுதப் போருக்கு வலுச் சேர்ப்பதாகவே அமைந்தன. 2006 இல் வன்னி இறுதிப் போர் வலிந்து திணிக்கப்பட்டபோது ஆட்சியாளர்கள் மக்களின் எழுச்சிக் குரல்களை, கொலைகள் - கடத்தல்கள் - கைதுகள் - சித்திரவதைகள் எனத் தமது வலிய கரத்தால் அடக்கினர்.

2009 மே மாதத்துடன் ஆயுதப் போராட்டம் மௌனித்துப்போனது. அரசியல் போராட்டத்தை நம்பியிருந்த மக்களுக்கு அரசியல் தலைமைகள் செய்ததெல்லாம் கழுத்தறுப்பாகத்தான முடிந்தது. அரசியல் போராட்டத்தில் நம்பிக்கை இழந்த மக்கள் தங்களை மட்டுமே நம்பித் தன்னெழுச்சியாகக் களத்தில் இறங்கினர். கேப்பாபிலவு நிலம் மீட்பில் தொடங்கிய இந்தத் தன்னெழுச்சிப் போராட்டம் இன்று காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகளுக்காக உறவினர்கள் நடத்தும் போராட்டம் என விரிவடைந்து இன்று இரணைதீவில் வந்து நிற்கிறது.

1992 ஆம் ஆண்டு கடற்படையினர் இரணைதீவு மீது தாக்குதல்களை நடத்தினர். இதனால் அங்கிருந்த 240 குடும்பங்கள் வெளியேறின. கடல் வளத்தாலும் நில வளத்தாலும் பொருளாதார ரீதியாகப் பெரு வளர்ச்சி பெற்றிருந்த மக்கள் தமது வளங்கள் அனைத்தையும் இழந்து வெளியேறினர். தென்னை, பனை மரங்கள் நிறைந்து இருந்தன. அவற்றில் இருந்து மக்களுக்குப் பெரும் வருவாய் கிடைத்தது. இதேபோல பட்டிகளாக ஆடு, மாடுகளை வுளர்த்திருந்தார்கள். இடம்பெயர்ந்த சமயத்தில் சுமார் 10 ஆயிரம் ஆடு, மாடுகளை அங்கேயே விட்டுச் சென்றனர் மக்கள். அவை அனைத்தையும் கடற்படை அபகரித்ததுடன், உணவுக்காகவும் வேறு தேவைகளுக்காகவும் அவற்றை வேறிடங்களுக்கு கொண்டு சென்றனர் எனக் கூறப்படுகின்றது.




இடம்பெயர்ந்த மக்கள் முழங்காவிலில் இரணைமாதா நகர் என்ற குடியிருப்புத் திட்டத்தை உருவாக்கிக் கொண்டு அங்கேயே வாழ்கின்றனர். வன்னிப்போர் முடிந்த பின்னர் தமது இருப்பிடத்துக்கு செல்ல அனுமதிக்குமாறு மக்கள் கேட்டுக்கொண்டபோதும் கடற்படையினர் சம்மதிக்கவில்லை. தொழில் செய்வதற்கான அனுமதி கோரியபோதும் அதுவும் மறுக்கப்பட்டது. போர் காரணமாக அனைத்து செல்வங்களையும் இழந்து பொருளாதார ரீதியில் பெரிதும் நலிவுற்ற மக்கள் தமது நிலத்தை விடுவிக்கக் கேட்டுப் போராட்டங்களை தொடர்ந்தனர்.

தொடர் போராட்டங்களின் விளைவால் 2016 செப்ரெம்பர் மாதம் அவர்களுக்கு மீன்பிடிக்க அனுமதியை வழங்கியது கடற்படை. அவர்கள் தங்கிச் செல்ல சிறு துண்டு நிலத்தையும் தீவில் வழங்கியது. தீவில் குடியேற மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டமையால் இரணைமாதா நகரில் இருந்து சுமார் 12 கிலோமீற்றர் தூரம் பயணித்தே மீன்பிடி யில் ஈடுபடுகின்றனர். போக்குவரத்துக்காக 2 ஆயிரம் ரூபா வரை செலவு செய்கின்றனர்.

2017 மே முதலாம் திகதி - புரட்சிகள் வெடிக்க மூல காரணமாக அமைந்த உழைப்பாளர் தினத்தில் தமது நிலத்தை விடுவிக்கக்கோரித் தொடர் போராட்டத்தைத் தொடங்கினர் மக்கள்.

2017 ஜூன் மாதம் இரணைமாதா நகருக்குச் சென்ற பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன 2 வாரத்தில் தீர்வைப் பெற்றுத் தருவதாகக் கூறிச் சென்றார். அவருடன் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஆகியோரும் உடனிருந்தனர். ஆனால் பல மாதங்கள் கடந்தும் அவர்களின் பதில் வரவேயில்லை.

2017 செப்ரெம்பரில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் நிலம் அளவீடு செய்யப்படும் என அறிவித்தார். ஆனால் எதுவும் நடந்தபாடாக இல்லை. ஆனால் தொடர் போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில் கடந்த 23 ஆம் திகதி 50 படகுகளில் சுமார் 500 பேர் வரையிலானோர் இரணைதீவுக்குள் புகுந்தனர். அடக்குமுறையின் அழுத்தத்தின் உச்சத்தாலேயே மக்கள் துணிந்து இறங்கினர். ஆயுதம் தாங்கிய கடற்படை கை வைத்தால் கோபத்தில் உள்ள மக்கள் தம்மைத் தாக்கி விடுவர் என ஒதுங்கிக் கொள்ள இரணைதீவில் இருந்தவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கினர்.

அங்கு வந்த கடற்படை அதிகாரி மக்களுடன் பேச்சு நடத்தினார். மக்கள் தங்கள் காணிகளை விடவேண்டும் என்ற தங்கள் கோரிக்கையில் இருந்து விலக தயாராக இல்லை. இதனால் எதுவும் செய்ய முடியாது திரும்பிப் போயினர். இரணைதீவு சென்ற மக்களில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அங்கேயே தங்கியிருந்து எந்தவசதி வாய்ப்புகளும் இன்றி போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

'குட்டக் குட்டக் குனிந்தால் மேலும் குட்டிக் கொண்டே இருப்பர்...' இரணைதீவு மக்களைக் குட்டிய அரசுகளும் - கடற்படையும் இப்போது அவர்கள் நிமிர்ந்ததால் பின்வாங்கியுள்ளனர்... அடக்கப்படும் - உரிமைகள் மறுக்கப்படும் மக்கள் புரட்சி செய்தால் என்னவாகும் என்பதை தமிழர்களை அடக்கும் ஆதிக்கவாதிகளுக்கு காட்டவேண்டிய தருணம் இது... இரணைதீவு மக்கள் அதற்கு சுழி போட்டிருக்கிறார்கள்... ஏனையவர்களுக்கு அது வழிகாட்டட்டும்... மக்கள் புரட்சி வெடிக்கட்டும்...

## இரணைதீவு வாழ்வும் வளமும்

கிளிநொச்சி மாவட்டத்தின் – பூநகரி பிரதேச செயலர் பிரிவில் வருகிறது இரணைதீவு. முழங்காவிலில் இருந்து 12 கிலோமீற்றர் தொலைவில் இத்தீவு அமைந்துள்ளது. வடக்கு – தெற்காக இரு தீவுகளாக உள்ள இத்தீவு பெரிய இரணைதீவு, சிறு இரணைதீவு என அழைக்கப்படுகின்றது. இதில் பெரிய இரணைதீவு 4.22 சதுர கி.மீ. பரப்பும், சிறிய இரணைதீவு 1.71 சதுர கி.மீ. பரப்புக் கொண்டவை.

இந்தத் தீவுகளின் வரலாறு மிகத் தொன்மையானது. ஆனாலும் ஆய்வுகள் இடம்பெறாமையால் இதன் வரலாற்றை நிறுவ முடியாதுள்ளது. பண்டைய காலத்தில் தமிழர் இராச்சியத்தின் தலைநகராக பூநகரியும் விளங்கியது. அக்காலத்தில் இரணைதீவும் சிறப்புப் பெற்றிருந்தது. இங்குள்ள மக்கள் தமிழகத்தின் பாண்டிய மன்னர்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தனர். பூநகரியில் பண்டைய கால பாண்டிய, உரோம் இராச்சியங்களின் நாணயங்கள் கிடைக்கப்பெற்றமை இதற்கு சான்றாக உள்ளன.

குருதீபம் என அழைக்கப்பட்ட இந்தத் தீவில் முத்து, சங்கு குளிப்பு இடம்பெற்றதாக போர்த்துக்கேயர்களின் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1542 இல் புனித பிரான்சிஸ் சவேரியர் இந்தத் தீவின் மக்களை கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றினார். 1899 இல் இங்கு தேவாலயம் கட்டப்பட்டது. ஈழப் போர் காலத்தில் இத்தீவு முக்கியத்துவம் பெற்றிருந்தது.

1992 ஆம் இலங்கைக் கடற்படையினர் இந்தத் தீவை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருந்தனர். அங்கு வாழ்ந்த 240 குடும்பங்கள் வெளியேறின.

இந்தக் குடும்பங்கள் முழங்காவிலில் இரணைமாதா நகர் குடியிருப்புத் திட்டத்தை உருவாக்கி அங்கு வாழ்கின்றனர். வன்னிப் போரால் பெரும் இன்னல்களை சந்தித்த இந்த மக்கள் உயிரழிவுகள் – இடப்பெயர்வுகளின் பின்னர் தற்போது 437 குடும்பங்கள் வசிக்கின்றன.

## ஈழத்துக் கிராமங்களும் மண் வாசனையும்

- வல்வை ரவி -

தொடர் 34

# கோட்டை



வட இலங்கையிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதிகளில் யாழ். கோட்டையும் ஒன்று. யாழ்ப்பாணம் மாநகர சபையில் ஒரு பிரிவாகக் கோட்டை என்ற பகுதி உள்ளது.

இந்த இடத்திலே போர்த்துக்கேயர் கி.பி. 1632 இல் ஒரு கோட்டையைக் கட்டினர். அதாவது யாழ்ப்பாணக் கோட்டை என்பது யாழ்ப்பாணத்தை ஐரோப்பியக் குடியேற்றவாத ஆட்சியாளர்கள் ஆண்ட காலத்தில் கட்டப்பட்ட கோட்டையாகும். போர்த்துக் கேயரால் அமைக்கப்பட்டாலும் பின்னர் ஒல்லாந்தரால் இடித்து அழிக்கப்பட்டு, மீளவும் கட்டப்பட்டது. 1980 களின் இறுதிக் காலம் வரை நல்ல நிலையில் இருந்த இந்தக் கோட்டை பின்னர் இடம்பெற்ற உள்நாட்டுப் போர்களின் தாக்கத்தால் சிதைவடைந்தது. எனினும் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒல்லாந்த அரசின் உதவியுடன் திருத்தப்பட்டுள்ளது.

ஒல்லாந்தர் 1658 யாழ்ப்பாணத்தை கைப்பற்றியபோது இந்தக் கோட்டையை அழித்துத் திருத்தியமைத்த சமகாலத்தில் கச்சாய், பூநகரி, ஆனையிறவு, பருத்தித்துறை முதலான இடங்களிலும் சிறு கோட்டைகளை கட்டினார்கள். இந்தக் கோட்டைகள் யாவும் பிற இடங்களிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும் பெருஞ்சாலைகளுடன் இணைக்கப்பட்டிருந்தன. இந்தக் கோட்டை வழிகளைக் கடப்பதாயின் அரச அலுவலர்களின் நுழைவுச் சீட்டுப் பெற வேண்டியிருந்தது. ஊர்காவற்றுறை, பருத்தித்துறை ஆகிய இடங்களிலிருந்து கப்பல் வழியாகப் பயணம் செய்வோருக்கு ஆங்காங்குள்ள கோட்டை அதிகாரிகளால் நுழைவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண அரசு 1619 இல் போர்த்துக்கேயரின் நேரடி அரசின் கீழ் வந்ததும் தலைநகரத்தை நல்லூரிலிருந்து அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு மாற்றினர். அங்கே யாழ்ப்பாணக் குடாக் கடலை அண்டி ஒரு கோட்டையையும் கட்டினர்.

1619 ஒகஸ்ட் மாதத்தில் பாது காப்புக்காகக் கோட்டை ஒன்றைக் கட்டிக்.கொள்ள கோவாவிலிருந்த தலைமையகத்திலிருந்து பிலிப்பேடி ஒலிவேராவுக்கு அனுமதி கிடைத்திருந்தது. எனினும் பொருத்தமான இடமொன்றைத் தெரிவுசெய்து கோட்டையின் கட்டட வேலை 1625 ஆம் ஆண்டிலேயே ஆரம்பமானது.

1629 இல் இது உபயோகத்திலிருந்த தெனினும் 1637 இல் கூட இது முற்றாகக் கட்டி முடிக்கப்படவில்லையென்றே தெரிகிறது. இது கிட்டத்தட்டச் சதுரவடிவமானது நான்கு மூலைகளிலும் அமைந்த காவலரண்களுடன் ஒவ்வொரு பக்கச் சுவர்களின் மத்தியிலும் அரைவட்ட வடிவிலமைந்த அரண்களும் இருந்தன. கோட்டைக்குள்ளே கத்தோலிக்க தேவாலயமொன்றும், கப்டன், மேஜரின் வீடும், வைத்தியசாலையொன்றும் மேலும் சில முக்கியமான கட்டடங்களும் இருந்தன. போர்த்துக்கேயரின் யாழ்ப்பாண நகரம் (போர்த்துக்கேயர் குடியேற்றம்) கோட்டைக்கு வெளியிலேயே இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

மேலும் யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் 1658 ஜூன் 22இல் கைப்பற்றியபோது போர்த்துக்கேயரின் கோட்டையையே இவர்கள் பயன்படுத்தினர். பின்னர் அதனை இடித்தழித்துவிட்டு, ஐங்கோண வடிவிலமைந்த புதிய கோட்டையைக் கட்டினார்கள். முதலில் ஐங்கோணக் கோட்டையின் உள் அரண்களையும், பின்னர் 18ஆம் நூற்றாண்டில் வெளிச் சுவர்களையும் அமைத்தனர். சிறப்பாகக் கூறின் யாழ்ப்பாண நகரிலிருந்த கோட்டை ஒல்லாந்தரின் தொழில் நுட்பத்துடன் அமைக்கப்பட்ட மிகச் சிறந்த கோட்டை எனக் கணிக்கப்படுகின்றது.

இந்து மாகடற்பகுதிகளில் அமைந்த கோட்டைகளில் யாழ்ப்பாணக் கோட்டை மிகவும் முக்கியமானதாகவும் பிரித்தானியாவிலுள்ள ஜோர்ஜ் கோட்டையுடன் (Fort George) ஒப்பிடத்தக்கதெனவும் கூறப்படுகின்றது. கோட்டையின் உட்புறமும், வெளிப்புறமும் ஐங்கோண இடங்களும் Zeoland, Holland, Golderland, Vtreoht, Friesland என்ற டச்சு மொழிப் பெயர்களால் வழங்கப்பட்டிருந்தன.


கீழைத்தேசத்திலுள்ள கோட்டைகள் யாவற்றிலும் யாழ்ப்பாணக் கோட்டை மிகப் பலமானதும், பாதுகாப்பானதும் என அனைத்துக் கட்டடக் கலை விற்பன்னர்களாலும் விதந்துரைக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கோட்டை அமைக்கப்பட்ட காலத்தில் இந்து சமுத்திர நாடுகள் பலவற்றிலும் பலமான கோட்டைகள் கட்டப்பட்டன. ஆனால், அவை எதுவும் யாழ்ப்பாணக் கோட்டையின் முழுமைக்கும் நிறைவுக்கும் தொழில்நுட்பத் திறனுக்கும் நிகராகாது எனப் பலராலும் போற்றப்பட்டுள்ளது.

யாழ். கோட்டை மதிலின் வெளிப்புறத்தில் 200அடி ஆழமான அகழியும் கோட்டையின் உட்புறத்தில் டச்சுத் தேவாலயமும் அமைக்கப்பட்டிருந்தன. கோட்டையின் உட்புறம் 14 ஏக்கர் பரப்பும், ஒரு மைல் வெளிப்புறச் சுற்றளவும் கொண்டிருந்தது.

இந்தக் கோட்டை கட்டும் வேலைகள் 1792 இல் முற்றுப் பெற்றன என அறியப்படுகின்றது. டச்சுக்காரரிடமிருந்து இந்தக் கோட்டை 28-09-1795 இல் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இது வட இலங்கையின் தலைமை இடமாக மாறியது. சிறைக்கூடமும் இங்கே இயங்கியது. இதனுள் அமைக்கப்பட்டிருந்த மாதா கோயில் "புதுமை மாதா கோயில்" எனவும் அழைக்கப்பட்டது. இந்தக் கோட்டையின் வெளிப்புறமுள்ள வெளியில் கோபுரத்துடன் கூடிய "முனியப்பர்

(18ஆம் பக்கம் பார்க்க)



# வாரப்பலன்

### மேடம்
குடும்பத்தில் சாதகமான சூழல் அமையும். வாகனப்பராமரிப்பு செலவு கூடும். பிள்ளைகளின் செயல்களை மென்மையாக கண்டிப் பது நல்லது. விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். பெண்கள் சிக்கனமாக இருப்பது நல்லது.

### துலாம்
சமயோசிதமாக செயல் பட்டு வருவீர்கள். திட்ட மிட்ட பணிகள் சிறந்து முழு அளவில் பலன் தரும். புதிய வீடு, வாகனம் வாங்க வாய்ப்புண்டு. பிள்ளைகளின் எதிர்கால நலன் சிறக்க தேவையானதை செய்வீர்கள்.

### ரிஷபம்
வசீகரமாக பேசி பிறரைக் கவர்வீர்கள். வாழ்வில் வளம் பெற புதிய திட்டம் உருவாக்குவீர்கள். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை ஓரளவு கிடைக்கும். பிள்ளைகள் பெற்றோர்க்கு பெருமை சேர்க்கும் செயலில் ஈடுபடுவர்.

### விருச்சிகம்
இந்த வாரம் உங்கள் பொருளாதார சூழ்நிலைகள் முன்னேற்றமாக இருக்கும். தொழில் ரீதியான முன்னேற் றங்கள் இருக்கும். வருமானம் கூடும். குடும்ப மகிழ்ச்சி, விவசாயிகள் விவசாயப் பணிகளில் ஈடுபடுவர்.

### மிதுனம்
ராஜயோக பலன் கிடைக்கும். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நண்பரி டம் கடனாக கொடுத்த பணம் கிடைக்கும். மனைவியின் சொல்லும், செயலும் குடும்ப நலன் பாதுகாக்கும்.

### தனுசு
குறை சொல்பவரிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. திட்டமிட்ட செயல் நிறைவேறக் கூடுதல் முயற்சி எடுக்க வேண்டும். உடன்பிறந்தவரிடம் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை அதிகரிக்கும்.

### கடகம்
வாழ்வில் நடைமுறைகளை உணர்ந்து செயல்படுவீர்கள். உங்களை அவமதித்தவரும் அன்பு பாராட்டுகின்ற சூழல் உருவாகும். வாகனப்பயணத்தால் நன்மை காண்பீர்கள். பிள்ளைகள் பெற்றோரின் சொல்லை மதித்து செயல்படுவர்.

### மகரம்
தாமதமான வேலைகளில் முன்னேற்றம் ஏற்படும். உடல் நலனுக்கு ஒவ்வாத உணவுகளை தவிர்க்கவும். மனைவியின் அன்பு நெகிழ்ச்சி தரும். தொழில் வளர்ச்சியால் சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்கள் ஆர்வமுடன் செயற்படுவர்.

### சிம்மம்
மனதில் குழப்பம் ஏற் பட்டு மறையும். நண்பரின் ஆலோசனைகளால் நலன்பெறுவீர். மனைவியிடம் கருத்து வேறுபாடு வராத அளவில் நடந்து கொள்ளவும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீராகும்.

### கும்பம்
வாழ்வில் முன்னேற கிடைக்கின்ற வாய்ப்புகளைச் சரியாக பயன்படுத்துவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும். தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். வழக்கு, விவகாரங்களில் அனுகூலம் உண்டாகும்.

### கன்னி
வழக்கு, விவகாரத்தில் சமரசப் பேச்சு சுமுக தீர்வுக்கு வழிவகுக்கும். மனைவியின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க விடாமுயற்சியும், கடின உழைப்பும் தேவை.

### மீனம்
கடின செயல்களையும் புதிய உத்தியால் எளிதாக நிறை வேற்றுவீர்கள். உடன்பிறந்த வர்களின் அன்பும், ஆதரவும் ஊக்கம் அளிக்கும். வாகனத்தில் . ஆரோக்கி யத்தில் உரிய கவனம் தேவை. ஆடம்பர செலவுகளை தவிர்ப்பதால் நன்மையுண்டு.




யாழ். புங்குடுதீவு மாணவி வித்யாவின் சகோதரிக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான நியமனம் ஜனாதிபதியால் வழங்கப்பட்டது.



முல்லைத்தீவு மாவட்டத்தில் போரினால் பாதிக் கப்பட்ட 100 மாணவர்களுக்கு வடமாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் துவிச்சக்கர வண்டி கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு சுள்ளப்பாடு பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.



இலங்கை மெய் வல்லுனர் சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 56ஆவது கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டியில் வடமாகாண மெய்வல்லுனர் சங்கத்தைப் பிரதிநிதித் துவப்படுத்தும் அனிதா ஜெகதீஸ்வரன் மீண்டும் தேசிய சாம்பியனாகச் சாதனை படைத்தார்.




படுகொலை செய்யப் பட்ட ஊடகவிய லாளர் தராகி சிவராமின் 13 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில், ஊடகவியலாளர் சண்.தவராஜாவின் 'தமிழ் மக்களின் விடுதலைப் பயணத்தில் ஊடகர் களின் பங்கு' என்ற கட்டுரைத் தொகுப்பு நூல் ஒன்று மட்டக்களப்பில் வெளியிட்டு வைக்கப்பட்டது.



வீரமுனை ஸ்ரீ சித்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயமும், வீரமுனை இராமகிருஷ்ண ஆலயமும் இணைந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு பாராட்டுவிழா நடத்தியிருந்தனர்.



வவுனியா பல்கலைக் கழகத்தில் பௌத்த ஆலயம் நிறுவுவதற்கு மாணவர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு நிர்வாகம் தடை. அதை எதிர்த்து மாணவர்கள் போராட்டம்.

# ஒரு குறள்

## பலர் விளக்கங்கள்



**குறள் 124: (அடக்கமுடைமை)**

செறிவறிந்து சீர்மை பயக்கும்
ஆற்றின் அடங்கப் பெறின்.

**1. கலைஞர் மு.கருணாநிதி உரை:**

அறிந்து கொள்ள வேண்டிய வற்றை அறிந்து அதற்கேற்ப அடக்கத்துடன் நடந்து கொள்ப வரின் பண்பை உணர்ந்து பாராட்டுக்கள் குவியும்.

**2. மு.வரதராசனார் உரை:**

அறிய வேண்டியவற்றை அறிந்து, நல்வழியில் அடங்கி ஒழுகப்பெற்றால், அந்த அடக்கம் நல்லோரால் அறியப்பட்டு மேன்மை பயக்கும்.

**3. சாலமன் பாப்பையா உரை:**

அடக்கத்துடன் வாழ்வதே அறிவுடைமை என்று அறிந்து, ஒருவன் அடக்கமாக வாழ்ந்தால் அவனது அடக்கம் நல்லவர்களால் அறியப்பட்டு அது அவனுக்குப் பெருமையைக் கொடுக்கும்.

# வெள்ளரி

வெள்ளரி சாப்பிடுவதன் மூலம், உடலின் வெப்பத்தையும் இரத்த அழுத்தத்தையும் சரிசெய்ய முடியும். விற்றமின், தாதுக்கள், காபோவைதரேற்று மற்றும் நார்சத்து ஆகியவை உள்ளன.

● 100 கிராம் வெள்ளரிக்காயில் 90% தண்ணீர், 7% காபோவைத ரேற்று உள்ளது.

● விற்றமின் 'சி' அதிக அளவில் உள்ளது. கொழுப்புச் சத்துக் குறை வாக இருப்பதால், இதயத்துக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது.

# கோணல் மரங்கள்

போலந்து நாட்டின் மேற்கு போமேரியன் பகுதியில் உள்ள காட்டுக்குள் சென்றால், ஓர் அதிசயத்தைப் பார்க்கலாம். அங்கிருக்கும் பைன் மரங்களில் பெரும்பாலும் அடிப்பாகத்தில் ஒன்று முதல் மூன்று மீற்றர் வரை பக்கவாட்டில் வளைந்து பிறகு நேராக வளர்ந்திருக்கும். 1930ஆம் ஆண்டுக்கு முன்பு, அதாவது ஜேர்மனி யின் ஒரு பகுதியாகப் போலந்து இருந்த போது நடப்பட்ட இந்த மரங்களின் அடிப் பகுதியில் ஏறத்தாழ 90 டிகிரி அளவில் வளைந்துள்ளன. இதற்கான காரணம் புரிபடாமலே இருக்கிறது. 'கோணல் காடு' (Crooked Forest) என்றே இந்தப் பகுதி அழைக்கப்படுகிறது.






முல்லா ஒரு மாலை நேரத்தில் தன் நண்பர் ஒருவர் வீட்டுக்குச் சென்று அவருடன் நேரம் போனது தெரியாமல் பேசிக் கொண்டிருந்தார். இருட்டாகி விட்டது.நண்பருக்கு மெழுகுவர்த்தியை எங்கு வைத்தேன் என்று தெரியவில்லை. இருட்டில் அங்குமிங்குமாக அலைந்து கொண்டிருந்தார்.

"என்ன சமாச்சாரம்?" என்று கேட்டார் முல்லா.

"மெழுகுவர்த்தியை எங்கோ வைத்துவிட்டேன். இருட்டில் உட்கார்ந்தோ நாம் பேசிக் கொண்டிருப்பது?" என்று வருத்தத்தோடு கூறினார்.

"இதற்காகவா கவலைப்படுகிறீர்கள்? நமது பேச்ச ஒலி இருட்டில்கூட நம் இருவர் காதுகளிலும் விழும் என்பதை மறந்து விட்டீரா?" என்றார்.

முல்லாவின் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற சாதுரியமான நகைச்சுவையை அனுபவித்து ரசித்த நண்பர் மகிழ்ச்சியோடு சிரித்துக் கொண்டார்.

# அட அப்படியா?

● வட அமெரிக்காவில் காணப்படும் கரடி இனங்களில் ஒன்று, கொடுங்கரடி எனப்படும் கிரிஸ்லீ (Grizzly). 180 கிலோ எடைகொண்ட இந்தக் கரடி, ஒரு குதிரையின் வேகத்துக்கு இணையாக ஓடும்.


● சந்தோஷமாக இருக்கும் நாய்கள், தன் வாலை வலது பக்கம் ஆட்டும். சோகமாக இருக்கும்போது இடது பக்கமாக ஆட்டும் என்கிறார்கள்.

● பாலூட்டி உயிரினங்களில் ஒன்று, மோல் (Mole). மண்ணுக்குள் வேகமாகக் குழி தோண்டும் இவை, ஒரே இரவில் 300 அடி வரைகூடத் தோண்டிவிடும்.

● தேனீ மற்றும் கழுகு சூரியனை நேருக்கு நேராகப் பார்க்கும் பார்வைத்திறன் கொண்டவை.


● பிளாஸ்ரிக் பொருள்களை எரிக்கும் போது டையாக்சின் எனும் நச்சுப் புகை வெளியாகிறது.





மேலே உள்ள படங்களில் ஏழு வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்.






# அற்புதமான பழம் அப்பிள்

அப்பிளில் நார்ச்சத்து இருப்பதால் எளிதில் செரிமானமாகிவிடும். இதில் உள்ள பாலிபீனால் (Polyphenols) வயிற்றில் உண்டாகும் வாயுவை அகற்றுவதுடன் வயிறு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்கும். மலச்சிக்கலைப் போக்கும். அப்பிளி ல் உள்ள எளிதில் கரையக்கூடிய 'பெக்டின்' (Pectin) என்னும் நார்ச்சத்து, உடலிலுள்ள கெட்ட கொழுப்பைக் குறைத்து நல்ல கொழுப்பை அதிகரிக்க உதவும் இதயத்தைப் பாதுகாக்கும்.

# போர்ப் படையிலும் ஒட்டகங்கள்

ஒட்டகங்களின் பற்கள் மிகவும் வலிமையாகவும் கூராகவும் இருக்கும். இவை, சண்டை போடும்போது பற்களையே அதிகம் பயன்படுத்தும். உலகம் முழுவதும் 14 மில்லியனுக்கும் மேற்பட்ட ஒட்டகங்கள் உள்ளன. இவற்றில் 90% அரேபிய ஒட்டகங்கள். இவை, வீட்டு விலங்குகளாக வளர்க்கப்படுகின்றன. 19ஆம் நூற்றாண்டில் அமெரிக்கப் போர்ப் படையில் பரிசோதனை முயற்சியாக, இரட்டைத் திமில் ஒட்டகங்கள் சேர்க்கப்பட்டன. பிறகு, அவை சுரங்கப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டன.



# விபூதி பிறந்த கதை

நிரஞ்சனா பர்னாதன் என்பவன் சிறந்த சிவபக்தன். சிவனாரைக் குறித்து அவன் செய்யும் தவம் நெடுநாள்களுக்கு நீடிப்பது உண்டு.

ஒருமுறை சிவனாரைக் குறித்துக் கடும் தவத்திலிருந்தவனுக்கு, விதி வசத்தால் கடுமையாகப் பசிக்க ஆரம்பித்தது. ஆகவே, தவம் கலைந்து கண்ணைத் திறந்தான். அப்போது அவனைச் சுற்றிலும் சிங்கங்களும், புலிகளும், பறவைகளுமாகப் பல உயிரினங்கள் காவலுக்கு இருந்ததைக் கண்டான்.



பசி வாட்டத்துடன் திகழ்ந்தவன் முன், பழங்களைப் பறித்து வந்து போட்டன பறவைகள். 'இது ஈசனின் கருணையே' என்று மகிழ்ந்த சிவபக்தன், கனிகளைச் சாப்பிட்டுவிட்டுத் தவத்தைத் தொடர்ந்தான். இப்படியே பல வருடங்கள் கழிந்தன.


ஒருவாறு அந்தத் தவத்தை முடித்துக்கொண்டு சிவ வழிபாட்டைத் தொடங்கினான். ஒருநாள் தர்பைப் புல்லை அறுக்கும்போது அவன் கையில் கத்திபட்டு இரத்தம் வடிந்தது. ஆனால், அவனுக்கோ எந்தப் பதற்றமும் இல்லை. ஆனால், குழந்தைக்கு ஆபத்தென்றால் தாய் பதறுவதுபோல அந்த ஈசன் பதறிப்போனார்.

உடனடியாக ஒரு வேடனாக வடிவெடுத்து ஓடோடி வந்தார். பக்தன் இருக்கும் இடத்துக்கு வந்தவர், அவனின் கையைப் பிடித்துப் பார்த்தார். என்ன ஆச்சரியம்... அவர் தொட்டவுடன் இரத்தம் வடிந்த இடத்தில் இருந்து சாம்பல் கொட்ட ஆரம்பித்தது.

வந்திருப்பது தாயுமாகி தண்ணருள் புரியும் அந்த சர்வேஸ்வரனே என்பதைச் சடுதியில் புரிந்து கொண்டான் பக்தன். ஆகவே அவரிடம், "இரத்தத்தை நிறுத்திச் சாம்பலைக் கொட்டச் செய்த தாங்கள், நான் வணங்கும் சர்வேஸ்வரனே என்பதை அறிவேன். இந்த அடியேனுக்குத் தங்களின் சுய உருவைக் காணும் பாக்கியம் இல்லையா" என வேண்டினான்.

மறுகணம் சுயரூபத்தில் தரிசனம் தந்தார் சிவபெருமான். அத்துடன், "உனக்காகவே இந்தச் சாம்பலை உருவாக்கினேன். மகிமைகள் நிறைந்த இந்தச் சாம்பல் இன்று முதல் 'விபூதி' என்று அழைக்கப்படட்டும். உனது அருந்தவத்தாலும் வழிபாட்டாலும் விபூதி உருவானது. அக்னியை எதுவும் நெருங்க முடியாததைப்போல் விபூதியை அணிந்து கொள்பவர்களின் அருகில் துஷ்ட சக்திகள் நெருங்காது. விபூதி என் ரூபம்" என்று அருள் புரிந்தார். விபூதியின் மகிமையைச் சொல்லும் திருக்கதை இது. நாமும், அளவில்லா நன்மைகளை அளிக்கவல்ல விபூதியை நாள்தோறும் அணிந்து நாதன் நாமத்தைப் போற்றி வழிபடுவோம். வினைகள் யாவும் நீங்கப்பெற்று வாழ்வில் வளம் பெறுவோம்.

# அன்பைப் பொழியுங்கள்



ஒரு சமயம் முகவ்கிஸ் எனும் எகிப்திய மன்னர், நபிகள் நாயகத்திற்கு பல பரிசுகளை அனுப்பி வைத்தார். அந்த பரிசுகளில் ஒன்றாக ஒரு மருத்துவரும் வந்தார். அந்த மருத்துவர் மதினாவிற்கு வந்து சில மாதங்கள் ஆகி விட்டபோதிலும், அவரிடம் ஒருவரும் வைத்தியம் பார்க்க வரவில்லை. தான் ஒரு அன்னியர் என்பதால் தன்னிடம் யாரும் வைத்தியம் பார்க்க வரவில்லையோ என அவர் வேதனைப்பட்டார்.

நாயகம் அந்த மருத்துவரைப் பார்த்து புன்முறுவல் பூத்தபடி, 'மருத்துவரே! நீங்கள் உங்கள் நாட்டிற்கு திரும்பி செல்லுங்கள். அல்லாஹ்வின் அருளால் உங்கள் உதவி எங்களுக்குத் தேவைப்படவில்லை. ஏனெனில் திருக்குர்ஆனின் போதனைப்படி நாங்கள் பசித்த பின்னரே உண்போம். அதுவும் குறைத்தே உண்போம். ஆகவே நோய் எங்களிடம் அண்டுவதில்லை," என்றார்.

நாயகம் இனிமையாக பேசியதால் மருத்துவர் மகிழ்ந்தார்.

'கோபத்திலே தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்பவரே உங்களில் சிறந்த வீரராவார்' என்பது நாயகத்தின் பொன்மொழியாகும். பேச்சை அன்பால் நிரப்புங்கள். அனைத்து இதயங்களையும் நம் பக்கம் திருப்ப உறுதி கொள்வோம்.


# மன்னியுங்கள்... மன்னிக்கப்படுவீர்கள்...!

இயேசுவுக்கு மொத்தம் பன்னிரண்டு சீடர்கள் இருந்தனர். அவர்களில் பேதுரு என்பவரே தலைமைச்சீடர். பேதுருவுக்கு ஒருநாள் பெருத்த சந்தேகம் ஏற்பட்டது. தனக்கு எதிராகத் தவறு செய்யும் சகோதரனை எத்தனை முறை மன்னிப்பது? என்பதே அந்தச் சந்தேகம்.

இப்படியொரு சந்தேகத்தை தீர்க்க, இயேசு கிறிஸ்துவால் மட்டுமே முடியும் என்று கருதிய பேதுரு, இயேசுவின் முன்னால் போய் நின்றார். 'இயேசுவே, எனக்கு எதிராக என் சகோதரன் தவறு செய்தால் அவனை எத்தனை முறை மன்னிப்பது? ஏழு முறை மன்னிக்கலாமா?" என்று கேட்டார். இதை மிகவும் கவனமாக கேட்டறிந்த இயேசு கிறிஸ்து, "ஏழு முறை மட்டுமல்ல, எழுபது முறை ஏழு முறை மன்னிக்கலாம்" என்றார். அதாவது, எழுபது முறை ஏழு முறை என்பது அதைக் கணக்கிட்டால் 490 என்று வருகிறது. அதன்படி பார்த்தால் ஒருநாளைக்கு 500 முறைகூட மன்னிக்கலாம் என்பதை மையப்படுத்தியே இயேசு கிறிஸ்து அப்படிக் கூறியிருக்கிறார். ஆனால், ஒரு மனிதன் ஒரு நாளைக்கு அத்தனை முறை தவறுகளைச் செய்யப் போவதில்லை என்பதே யதார்த்தம்.

மன்னிப்பு குறித்து சொன்ன இயேசு, பேதுருவிடம் ஒரு சம்பவத்தையும் கூறினார். 'அரசன் ஒருவன் இருந்தான். அவனது பணியாளர்களில் ஒருவன் கடன் பெற்ற வகையில் 10 ஆயிரம் தாலந்து வரை அரசனுக்குக் கொடுக்கவேண்டியிருந்தது.

கடன்பட்டிருந்த பணியாளனை அழைத்த அரசன், 'நீ பட்ட



கடனை திருப்பிக் கொடு. இல்லையென்றால், உன்னையும் உன் மனைவி மற்றும் பிள்ளைகளையும் சிறையில் தள்ளுவேன்' என்று சொன்னான். இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அந்தப் பணியாளன், 'ஐயா, அது பெருந்தொகை. என்னால் அவ்வளவு தொகையைச் செலுத்த முடியாது. கொஞ்சம் இரக்கம் காட்டி என்னைப் பொறுத்தருளுங்கள். என் கடன் தொகை முழுவதையும் தள்ளுபடி செய்யுங்கள்' என்று கோரிக்கை வைத்தான். இதைக் கண்ட அரசன், பணியாளனின் நிலைமையை அறிந்து அவனை மன்னித்தார்.

இதையடுத்து வெளியே சென்ற பணியாளன், தனக்கு 100 தாலந்து தரவேண்டிய வேறொரு பணியாளனைக் கூப்பிட்டு, "நீ எனக்குத் தரவேண்டிய கடன் தொகை முழுவதையும் உடனடியாக திருப்பிக் கொடு. இல்லாவிட்டால், உன்னையும் உன் மனைவி மற்றும் பிள்ளைகளை சிறையில் அடைப்பேன்" என்கிறான். ஆனால், அந்தப் பணியாளனோ, "என்னால் அவ்வளவு தொகையைச் செலுத்த முடியாது. பொறுத்துக் கொள்ளுங்கள்" என்றான். அதை ஏற்க மறுத்ததுடன், அந்தப் பணியாளனை மன்னிக்காமல் சிறையில் அடைத்தான்.


இந்தச் சம்பவத்தைப் பார்த்த அப்பகுதி மக்கள் நடந்தவை அனைத்தையும் அரசனிடம் போய்ச் சொன்னார்கள். உடனே ஆவேசமடைந்த அரசன், அந்தப் பணியாளனை அழைத்து, 'நீ எனக்குத் தரவேண்டிய 10 ஆயிரம் தாலந்தைத் தள்ளுபடி செய்து உனக்கு மன்னிப்பு வழங்கியதுபோல. உன்னிடம் 100 தாலந்து பெற்ற அந்தப் பணியாளன் மீது இரக்கம் காட்டாமல், அவனை மன்னிக்காமல் ஏன் சிறையில் தள்ளினாய்? நீ அவன் மேல் இரக்கம் காட்டாததால் உனக்கு இரக்கமின்மையே தண்டனையாகக் கிடைக்கும்" என்கிறான் அரசன். அந்தக் கையோடு அந்தப் பணியாளனை சிறையில் தள்ளிய அரசன், 'நீ எனக்குக் கொடுக்கவேண்டிய 10 ஆயிரம் தாலந்தைத் திருப்பிக் கொடுக்கும்வரை சிறையில் இரு. போ..." என்றான். அதன்படி சிறையில் அடைக்கப்பட்டான் அந்தப் பணியாளன். இந்த உவமையை பேதுருவிடம் எடுத்துக் கூறிய இயேசு, "கடவுள் மனிதர்களிடத்தில் நடந்துகொள்வதுபோல நீங்களும் தாராளமாக நடந்துகொள்ளுங்கள். மன்னியுங்கள், நீங்கள் மன்னிக்கப்படுவீர்கள்" என்கிறார். "உனக்கு அடுத்திருப்பவர் செய்த அநீதியை மன்னித்து விடு அவ்வாறெனில் நீ மன்றாடும் போது உன் பாவங்கள் மன்னிக்கப்படும்' என்றும் இயேசு கூறியிருக்கிறார். தன்னை சிலுவையில் அறையும்போதுகூட 'பிதாவே இவர்களை மன்னியும்' என்றே இயேசு சொல்கிறார்.

ஆம், இயேசு போதனைகளுடன் நிறுத்திக்கொள்ளாமல் அவற்றின்படி வாழ்ந்தும் காட்டினார்.

# யார் என்று தெரிகிறதா?

## ஆளைக் காட்டும் ஆளுமை உளவியல்

- ஜி.லட்சுமணன்



மாறுபட்ட மனநிலை கொண்ட மனிதர்கள் சூழ வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அவர்களின் மாறுபட்ட குணாதியங்களை அடிப்படையாகக் கொண்டு மனிதர்களை, 'ரைப் ஏ பெர்சனாலிட்டி', 'ரைப் பி பெர்சனாலிட்டி' என இரண்டு விதமாகப் பிரிக்கலாம் என்கிறார்கள் உளவியாளர்கள்.

இவர்களின் இந்தக் குணாதிசயங்கள், உடல் ஆரோக்கியத்தையே தீர்மானிக்கும் காரணிகளாக இருக்கின்றன என்கிறது ஓர் ஆய்வு. 'ஒருவரின் குணத்துக்கும் உடல் நலனுக்கும் எப்படித் தொடர்பு இருக்க முடியும் எனக் கேள்வி எழலாம். இதை உண்மை என்று அடித்துச் சொல்லும் அந்த ஆய்வு, யாருக்கெல்லாம் உடல் ஆரோக்கியம் கெடும் என்றும் எச்சரிக்கை கொடுக்கிறது.

1950ஆம் ஆண்டில் இதய நோய் மருத்துவர்களான மேயர் ஃப்ரைட்மன் (Meyar Friedman), ரே ரோஸன்மன் (Ray Rosenman) ஆகியோர் மேற்கொண்ட ஆய்வில் இது தெரியவந்தது. 35 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட வயதினரிடம் எட்டரை ஆண்டுகள் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவர்களது ஆய்வின்படி மனிதர்களை ரைப் ஏ பெர்சனாலிட்டி மற்றும் ரைப் பி பெர்சனாலிட்டி என வகைப்படுத்தியிருக்கிறார்கள்.

**ரைப் ஏ பெர்சனாலிட்டி**

இந்த வகையினர், எதையாவது சாதிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் இருப்பார்கள். போட்டி மனப்பான்மையும் இருக்கும். 'எல்லாவற்றிலும் மிகச் சரியாக இருக்க வேண்டும்' என்று நினைப்பார்கள். நேர நிர்வாகத்தில் கறாராக இருப்பார்கள். சின்னச்சின்ன விடயத்துக்கு எல்லாம் கோபப்படுவார்கள். ஒரு வேலையை எவ்வளவு சிறப்பாகச் செய்தாலும் அதில் எளிதில் திருப்தி அடைய மாட்டார்கள். எப்போதுமே பரபரப்பாக இருப்பார்கள். எதிலும் நிதானம் என்பதே இருக்காது. வெற்றி பெறுவது மட்டுமே வாழ்க்கை என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். தங்கள் வேலையை வாழ்க்கையாக நினைத்துக் (workaholics) கடினமாக உழைப்பார்கள்.

இந்த ஆளுமை, பொருளாதார முன்னேற்றத்துக்கு நல்லது என்றாலும், உடல்நலனுக்கு நல்லதல்ல. இவர்களுக்கு உண்டாகிற பதற்றமும் பரபரப்பும் இதய நோய்களுக்கு வழிவகுக்கும் என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. 'வேலையே வாழ்க்கை என வாழ்வதால், எந்த நேரமும் மனஅழுத்தம் இவர்களுக்குள் இருக்கும். இது அவர்களுக்குச் சீக்கிரம் மாரடைப்பைக் கொண்டுவரக் காரணமாகலாம்' என்கிறது அந்த ஆய்வு.

**ரைப் பி பெர்சனாலிட்டி**

நேர் எதிரான குணங்களைக் கொண்டிருப்பார்கள். இவர்களி டம் போட்டி மனப்பான்மை இருக்காது. ஒரு போட்டியில் வெற்றி பெறுவதைவிட பங்கேற்க வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே இருக்கும். வாழ்க்கையை அதன் போக்கிலேயே, வாழக் கற்றுக் கொண்டவர்கள். இருப்பதை வைத்துக்கொண்டு வாழ்க்கையை ரசனையோடு அனுபவித்து வாழ்வார்கள். ரைப் ஏ பெர்சனா லிட்டியுடன் ஒப்பிடும் போது இவர்களுக்கு இதய நோய்கள் வருவதற்கான வாய்ப்புகள் குறைவு என்கிறது அந்த ஆய்வு.

இந்த ஆய்வு குறித்து மனநல மருத்துவ நிபுணரின் பதிவு வருமாறு:

"பெர்சனாலிட்டி பற்றிய இந்த ஆய்வில், ரைப் ஏ பெர்சனாலிட்டி யினர் அனைவருக்கும் இதய நோய் வரும் என்றோ, அதுமட்டுமே ஒரு காரணமாக இருக்கும் என்றோ சொல்லவில்லை. மேலும் இதுதொடர்பான ஆய்வுகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, 'ரைப் ஏ பெர்சனாலிட்டி உள்ள அனைவருக்கும் இதய நோய்கள் வந்துவிடும்' என்று பயப்படத் தேவையில்லை.


பிறப்பின் நோக்கமே வாழ்க்கையை விரும்பி வாழ வேண்டும் என்பதுதான். ரசித்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். பதற்றம், போட்டி மனப்பான்மை என் எல்லாப் பண்புகளும் இருக்கவேண்டும். ஆனால், அளவோடு இருக்க வேண்டியது அவசியம். வேலை என்பது வாழ்க்கையில் ஒரு பகுதிதான் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அன்றைய சூழலை லாகவமாக எதிர்கொண்டு, எல்லாவற்றையும் ரசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். வேலை, வேலை என ஓடிக்கொண்டிருந்தால், வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும்போது எந்த சுவாரஸ்யமும் இருக்காது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஆளுமையைத் தீர்மானிப்பதில் பெற்றோர் வளர்ப்பும் முக்கியக் காரணம். மதிப்பெண்களே வாழ்க்கையைத் தீர்மானிக்கும் என்று குழந்தைப் பருவத்திலேயே பெற்றோரால் கற்பிக்கப்படுவதால், எல்லாவற்றையும் போட்டி மனப்பான்மையுடன் எதிர்கொள் கிறார்கள். எனவே, குழந்தைப் பருவத்திலேயே பெற்றோர் முன்னுதாரணமாக இருந்து, குழந்தைகளை வளர்த்தால் மட்டுமே அவர்கள் மனஅழுத்தம் இல்லாமல் வாழ்க்கையை எதிர்கொண்டு, அனுபவித்து வாழமுடியும்."

**வழிமுறைகள்**

- 8 மணி நேரம் வேலை, 8 மணி நேரம் தூக்கம். மீதமுள்ள 8 மணி நேரத்தை ஓய்வுக்காகவும் உடல் ஆரோக்கியத்துக்காகவும் செலவிடுங்கள்.
- தினமும் தியானம், யோகாவுக்கு நேரம் ஒதுக்குங்கள்.
- பணிச்சூழலில் மனஅழுத்தம் இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.
- குடும்பத்தினர், நண்பர்களோடு நேரம் செலவிடுங்கள்.
- புகை, மது பழக்கங்களுக்கு அடிமையாகாதீர்கள்.
- ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தைப் பின்பற்றுங்கள்.

# பற்களை உறுதியாக்கும் பனங்கட்டி



பனை மரத்திலிருந்து கிடைக்கும் பதநீரில் இருந்து தயாரிக்கப்படுவதே பனங்கட்டி அல்லது கருப்பட்டி. இதை, பனைவெல்லம் என்றும் சொல்வார்கள். இது, வெறும் இனிப்புச்சுவை மட்டுமின்றி, மருத்துவக் குணமும் நிறைந்தது.

- கல்சியம் மிகுந்திருப்பதால் பற்களும் எலும்புகளும் உறுதியாகும்.
- பருவமடைந்த பெண்களுக்குக் பனங்கட்டி சேர்த்து உளுத்தம் களியும் வெந்தயக் களியும் செய்து கொடுப்பார்கள். இந்தக் களிகள், இடுப்பு வலுப்பெற உதவுவதுடன் கருப்பைக்கும் ஆரோக்கியம் தரும். பனங்கட்டி யுடன் எள் சேர்த்து இடித்து அவ்வப்போது சாப்பிடுவதாலும் கருப்பை வலுப்பெறும்.
- கருப்பட்டி, இரத்தத்தைச் சுத்திகரித்து விருத்தியாக்குவதால் மனமும் உடலும் உற்சாகமாக இருக்கும்.
- நீரிழிவு நோயாளிகள் குறைந்த அளவில் பனங்கட்டியை உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.
- அம்மை நோய்க்கு பனங்கட்டி மிகச்சிறந்த மருந்து. நோய் எதிர்ப்பானாகவும் தடுப்பானாகவும் செயற்படும்.
- சீரகத்தை வறுத்து, சுக்கு, மிளகு, ஓமம், கொத்தமல்லி, கருப்பட்டி சேர்த்து, சுக்குக்காபி செய்து குடித்தால் உடல் புத்துணர்ச்சி பெறும். வாய்வுத்தொல்லை நீங்கி நன்றாகப் பசியெடுக்கும்.
- பனங்கட்டியில் இரும்புச்சத்து நிறைந் திருக்கிறது. சோர்வு, முடி உதிர்தல், இரத்தச் சோகை போன்றவற்றுக்கு பனங்கட்டி நல்லது.
- இருமல், சளித்தொல்லையால் தவிப்பவர்கள், குப்பைமேனி, துளசி, ஆடாதோடை சாற்றுடன் பனங்கட்டி சேர்த்துச் சாப்பிடுவது நல்லது.
- மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும் வயிற்றுவலி குணமாக, பீட்ரூட் மற்றும் மாதுளை ஜூஸில் பனங்கட்டி சேர்த்துப் பருகலாம்.
- உலர்திராட்சை, நிலக்கடலை, செவ்வாழைப்பழம், பசும்பால், பனங்கட்டி கலந்த சாற்றைக் காலையில் வெறும் வயிற்றில் அருந்தி வந்தால் ஆண்மை அதிகரிக்கும்.
- குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் நிலக்கடலையுடன் பனங்கட்டி சேர்த்துச் சாப்பிட்டால் பால் சுரப்பு பெருகும்.

# புதுவிதி 100 ஆவது

PUTHU VITHI

இதழை முன்னிட்டு நடத்தும்

## சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள்

### சிறுகதை

1ஆம் பரிசு : ரூ. 5,000
2ஆம் பரிசு : ரூ. 3,000
3ஆம் பரிசு : ரூ. 2,000

### கவிதை

1ஆம் பரிசு : ரூ. 1,000
2ஆம் பரிசு : ரூ. 750
3ஆம் பரிசு : ரூ. 500

### கட்டுரை

1ஆம் பரிசு : ரூ. 1,000
2ஆம் பரிசு : ரூ. 750
3ஆம் பரிசு : ரூ. 500

கையெழுத்தில் ஏ-4 தாளில் 5 பக்கங்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

**10 சிறந்த படைப்புகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள்**

### கட்டுரைப் போட்டி

கையெழுத்தில் ஏ-4 தாளில 3 பக்கங்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

கட்டுரைப் போட்டி (மாணவர்கள் மட்டுமே பங்கேற்கலாம்)

**தலைப்புகள்**

**க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கானது**

- சுற்றுச் சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்களிப்பு.
- பயனுள்ள வகையில் சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்தல்.
- ஜனநாயக அரசியலின் பலமும், பலவீனமும்.

**க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கானது**

- சுற்றுச் சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்களிப்பு.
- மாணவர்களின் ஆளுமையில் விளையாட்டுக்களின் பங்கு.
- வாசிப்பு பழக்கத்தை விருத்தி செய்ய வேண்டியதன் அவசியம்.

### போட்டிகளுக்கான விதிகள்:

- சிறுகதை, கவிதை போட்டிகளுக்கு வயதுக் கட்டுப்பாடு கிடையாது.
- மாணவர்களாயின் அதிபர் அல்லது வகுப்பு ஆசிரியரின் ஒப்பம் அவசியம்.
- ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.
- புதுவிதியில் வெளியாகும் போட்டிக் கூப்பனை வெட்டி அனுப்பும் விண்ணப்பங்களுக்கு இரட்டிப் புப் பரிசு.
- பரிசு வெல்லும் மாணவர்களின் பாடசாலைக்கும் விசேட பரிசுப் பொதிகள்.

புதுவிதி போட்டிக் கூப்பன்

பெயர் :............................................
............................................
முகவரி: ............................................
............................................
............................................
பாடசாலை: ............................................
(மாணவராயின்) ............................................

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 05.05.2018**

அனுப்ப வேண்டிய முகவரி:

**புதுவிதி**
**இல. 107, இராச பாதை,**
**கோப்பாய் - திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

■ யோ.கௌதமி

# ஆத்மா நான்



மத்தியானப்பொழுது.. கோரவெயில் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. என் வீட்டு முற்றத்தில் யார் யாரோவெல்லாம் வருகின்றனர் சொல்லாமலேயே போகின்றனர். அம்மா அழுதழுது ஓர் ஓரமாய் கந்தலாய் கசங்கிக் கிடக்கின்றாள். என் அக்காவும் தங்கையும் விம்மும் ஒலி வாசல் வரை கேட்கின்றது.

ஐயோ என்னவாயிற்று இவர்களுக்கு? படலைக்குப் பக்கத்தில் நான்கு பேர் அடிக்கும் பறைச் சத்தம் நான்கு தெருத் தாண்டியும் கேட்கும்போல் இருந்தது. எனக்கு இந்த சத்தத்தைக் கேட்கும் போதெல்லாம் ரத்தம் உறைந்து உள்ளுக்குள்ளே ஒருவித பயம் குடிகொள்ளும். ஆனால் இன்று? எங்களோடு சண்டையிட்டு கதைக்காமலிருந்த அத்தை வருகிறார். அம்மா கதறி அழுகிறாள். கூடவே இன்னும் பலரும் அழுகின்றனர்.

நான் சுற்றிச் சுற்றி அலைகின்றேன். யாரும் கண்டு கொள்வதாய் தெரியவில்லை. எந்தவொரு மத்தியானமும் இப்படி நீண்டதாகவும் கொடியதாகவும் அமைந்திருக்கவில்லை. அந்தோ தூரத்தில் யாரது நான் காதலித்தவனா? கடைசிவரை பிரியமாட்டேன் என்று வாக்களித்தேனே. நான் பிரியவில்லை. அவனருகே போய் நிற்கின்றேன். அவன் மனக்குமுறல் கண்ணீராகக் கொப்பளித்தது. பைத்தியக்காரா... நான் உன்னுடன்தான் இருக்கின்றேன் எனக் கத்த வேண்டும்போல் இருந்தது. என் குரல் யார் செவியில் விழுந்து விடப்போகின்றது? முதன்முதலில் அவனைச் சந்தித்த காட்சி என் கண் முன்னே நிழலாடுகின்றது

அன்று

முதல் சந்திப்பிலேயே அவன் தொலைத்த யாரையோ என்னுள் தேடிக்கொண்டிருந்தான். ஆண், பெண் என்ற பரஸ்பர அறிமுகத்துக்குப் பிறகு ஒரு பொதுநேசம் எங்களுக்குள் ஒட்டிக்கொண்டது. காமம், பணம் இப்படியான சராசரிக்குள் சிக்கிக் கொள்ளாமல் காதலித்தோம். அவன் ஒருபோதும் எதிர்பார்த்திருக்கமாட்டான் நான் இப்படி பாதியிலேயே போவேனென்று.

மோகன ராகத்தில் சுண்ணம் இடிக்கும் சத்தம் நெஞ்சை உருக்கி என்னைக் கட்டிப் போட்டது. அதைக்கேட்டு எனக்கு அழுகைதான் வெடித்தது. ஆனால் எப்படி கண்ணீர் சிந்த முடியும்? என் தலைமாட்டில் தீப்பந்தங்கள் ஒளிர்ந்தன.

முடிந்துவிட்டன. சடங்குகள், கிரியைகள் எல்லாம் முடிந்து விட்டன. அதோ அழகான தென்னங்குருத்தாலான வேலைப்பாடுகளுடன் கூடிய பாடை வாசலில் வைக்கப்பட்டது. பறைச் சத்தம் வானைப் பிளந்தது.

ஐயோ!

என் பெயர் மறைந்தது. பிணம் என்ற பொதுவான பெயர் சூட்டப்பட்டது. என் உடலை நான்கு பேர் தூக்குகின்றனர். அப்பா தலையில் அடித்து அழுகின்றார். அம்மா நிலத்தில் புரண்டு கண்ணீராகச் சொரிகின்றாள். அக்கா, தங்கையின் அழுகை வீறிட்டது. ஐயோ... என்னால் இதையெல்லாம் பார்க்க முடியவில்லை.

என்னால் என்ன செய்யமுடியும்? எனக்குத்தான் இங்கு வாழ்வதற்கான காலம் முடிந்துவிட்டதே..! அதோ என் உடல் தெருமுனையை அடைகிறது. சொந்தக்காரப் பையன் ஒருவன் வெடிகளைக் கொளுத்திப் போடுகின்றான். பாவி எனக்கு வெடிச் சத்தம் என்றாலே பயம். தீபாவளிக்கு பட்டாசு கொளுத்திப் போடுவதையே கதவிடுக்கில் காதைப் பொத்திக்கொண்டு ஒளிந்திருந்து பார்ப்பவள் நான். என் இறுதி ஊர்வலம் அமைதியாக நடந்திருக்க வேண்டும். தெருவெல்லாம் காகிதக் குப்பைகளை இறைத்து ஊரையே அழுக்காக்குவதில் எனக்கு விருப்பமில்லை. ம்... ம்... என்ன செய்வது எனக்குப் பிடிக்காததே என் இறுதி ஊர்வலத்திலும்...

கடைத்தெருவில் நான் அடிக்கடி கண்டு கன்னத்தில் இதழ் பதிக்கும் அந்தச் சிறுமி என்னைக் கண்டு கண்களை மூடிப் பயந்து தாயின் பின் ஒளிந்து கொள்கின்றாள். ஓ...! மரணம் இத்தனை கொடூரமானதா? வாழும்போது எவ்வளவு பணம், அந்தஸ்து, புகழ், பட்டம், படிப்பு என்றிருக்கும் அனைவருக்கும் இதேகதிதான் என்பதை ஒரு நிமிடம் சிந்தித்துப் பார்த்தால்கூட உலகமே சமத்துவமாகி விடாதா? என்ன இது எனக்குள் இத்தனை உள்ளொளியா?

ஓ...! இதைத்தான் சுடலை ஞானம் என்பார்களா?

என் உலகமே என் வீடு, என் குடும்பம்தான்... அப்படி இருக்கும்போது இவர்கள் என்னை எங்கு கொண்டு செல்கின்றனர்? ஐயோ... ஐயோ... என்று கதறுகின்றேன். என் குரலை கேட்போர் இல்லை. மயிரிழையில் வீதியைக் கடப்பது என்றால் எனக்கு ஒரு அலாதியான விசயம். அது எவ்வளவு தவறு என்று தெரிந்தும் நானும் அந்த தவறை செய்திருந்தேன். எனக்கு வாழ வேண்டும் என நிறைய ஆசைகள். ஆனால் கொடும்விதி வேகத்தில் என் ஆத்துமத்தை அலைய வைத்து விட்டானே.

இப்படித்தான் நேற்றும் வீதியை நின்று நிதானித்துக் கடப்பதற்கு எனக்கு நேரம் போதுமானதாக இருக்கவில்லை. பரீட்சைக்குச் சரியான நேரத்தில் செல்ல வேண்டும் என்று வீதியை கடக்க எத்தனிக்க கண நேரத்தில் என் உடலை விட்டு என்னைப் பிரித்துவிட்டான் காலன். எதிர்பார்த்திராத உடனடி மரணம். எந்த மரணத்திற்குப் பின்னும் மனிதனின் ஆத்தும சக்தியை உலவவிடுவது எவ்வளவு பயங்கரமானது தெரியுமா?

இதோ இனி நான் வசிக்கப் போகும் மயான உலகம் நெருங்கி விட்டது. என் உடலின் மேல் தீயும் வைத்தாகி விட்டது. என் உடல் அக்கினியில் ஐக்கியமாகின்றது. தீயில் விரல்பட்டாலே துடித்துக் கூச்சலிட்டு ஊரையே கூட்டிவிடும் நான். 'நான்' வசித்த எனக்கு உருக்கொடுத்த இத்தனை நாள் ஊட்டி வளர்த்த என் உடல் கட்டையில் வேகும்போதும் எனக்கு எந்த வலியுமில்லை. எல்லோரும் வீடு திரும்புகின்றனர். கூடவே நானும்...

ஆற்றொணாத் துயரத்தோடு மூலையில் முடங்கிக் கிடக்கின்றனர். அம்மாவின் அழுகை மட்டும் ஓய்ந்ததாய்த் தெரியவில்லை. அதோ நான் படித்து விட்டுப் பாதியிலேயே வைத்த எஸ்.ராவின் யாமம் நாவல். காற்றில் பக்கங்கள் புரள்கின்றன. எந்தப் பக்கத்தில் விட்டேன்? தட்டித் தடவுகின்றேன். காற்று பக்கங்களைக் கலைத்துப் போட்டது. யாமம் நாவல் தவழ்கிறது காற்றில்.

நான் வருவதும் போவதுமாக இருக்கின்றேன். யாருமே உணரவில்லை. அம்மாவைத் தவிர அனைவரும் அழுகையை மறந்து இயல்புக்குத் திரும்பியிருந்தனர்.

ஏழு நாட்கள் கடந்து விட்டன...

எட்டாவது நாள்... என் படத்தின் முன் எனக்குப் பிடித்த உணவுகள் எல்லாம் படைக்கப்படுகின்றன. அம்மாவின் சில்லுக் களி எனக்கு நினைவுக்கு வந்தது. முதல்நாள் இரவே அரிசிமா உளுத்தம்மா இரண்டையும் சேர்த்து குழைத்து சிறு சிறு சில்லுகளாகத் தட்டி அதை அவித்து வைத்து பின் மறுநாள் தேங்காய்ப் பாலை கொதிக்க வைத்து அதற்குள் அந்த சில்லுகளையும் சீனி ஏலக்காய்த் தூள் எல்லாம் போட்டு கிளறி கமகமவென்று வாசனை மூக்கைத் தூக்கும் வண்ணம் அம்மா செய்யும் அதே சில்லுக்களி என் படத்தின் முன்னே படைக்கப்பட்டிருந்தது.

அம்மாவின் கண்ணீர் இன்னும் கடலாக...

தங்கை அழுதழுது முகாரியில் தேவாரம் இசைக்கின்றாள்

"இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகிறார்"

பெரியபுராண வசனங்கள் மத்தியமாவதி ராகத்தில். எனக்கு மிகவும் பிடித்த வரிகள் தங்கையின் கணீரென்ற குரலில் ஓங்கி ஒலிக்கின்றது. கண்ணீரை வேடிக்கை பார்ப்பதில் எனக்குத் துளியும் விருப்பமில்லை.

உறங்கிப் பலநாட்கள் ஆகிவிட்டன. மயானம் நோக்கி விரைகின்றேன்.

எந்தக் கவலையும் இன்றி உறங்கிப் போகின்றேன். என் மயான உலகில்...

● ● ●


விடிந்து விட்டது..

"அம்மா ஆவிகளைப் பற்றிக் கனவு கண்டால் என்ன நடக்கும்?"

"யார் ஆத்மா?" அம்மாவின் கேள்விக்கு என் பதில்

"என் ஆத்மா"...

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்



# பாம்பாய் வளைக்கிறாள் உடம்பை

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளைவதில்லை. 13 வயது யானா செரிபனோவா தன் உடம்பை வளைக்கும் முறை பார்ப்போரை பிரமிக்க வைக்கின்றது. ரஷ்யாவில் மிகப் பிரபல்யமான நடனந்தான் Ballet என்றழைக்கப்படுகிறது. இதை இங்கு சிறுவயது தொடக்கம் கற்பவர்கள் ஏராளம். பொதுவாகவே சோவியத் ஒன்றியம் என்றிருந்த நாடுகளில் எல்லாம் இந்த நடனம் மிகப் பிரபல்யமாக இருக்கின்றது.

இங்குள்ள அக்கடமி ஒன்றில் கடும் பயிற்சி தினமும் சிறுமிக்கு அளிக்கப்பட்டு வருகின்றது. இவளுக்கு இன்ஸ்டகிராமில் 67,000 விசிறிகள் இணைந்திருக்கிறார்கள். இவர்களே அக்கடமிக்கான பணச் செலவையும் கொடுத்து வருகிறார்கள். நான்கு வயதிலிருந்தே அவள் பயிற்சி பெற்று வருவதாகத் தாயார் கூறுகிறார். தன் மகள் ஒரு சுப்பர் ஸ்ராராக வளர்ந்து நாடெங்கும் தேடப்படும் ஒரு சிறந்த நாட்டியக்காரியாக வேண்டும் என்பதே தாயின் கனவு.

நிச்சயம் இந்தச் சிறுமி தாயின் கனவை நனவாக்குவாள்...



# கல்லடுக்கும் கலை இது

சிறிய வயதில் பழைய ரின்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி, கோபுரம் அமைத்து விளையாடியதும், அதைக் குறிவைத்து பந்தால் எறிந்து, யார் அதிகமானவற்றை விழுத்துகிறார்கள் என்று போட்டி போட்டுக் கொண்டதும் ஞாபகத்தில் இருக்கின்றதா? அந்தச் சிறுவயது விளையாட்டை, இப்பொழுது பெரிய அளவில் நடத்தி வருகிறார்கள். ஐரோப்பிய நாடுகள் கல்லை அடுக்கும் போட்டியை , கடந்த வருடத்திலிருந்து நடத்திவருகிறார்கள் என்பது உங்களுக்குப் புதினமாக இருக்கலாம்.


இந்த வருடத்திற்கான போட்டி ஏப்ரல் 22 அன்று இடம்பெற்றிருக்கின்றது. இது இரு நாட்கள் தொடரும் போட்டி. இதில் 30க்கு மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றியிருக்கின்றார்கள். அமெரிக்கா, ஸ்பெயின், இத்தாலி, உட்பட, பிரிட்டனின் பல பாகங்களிலிருந்தும் போட்டியாளர்கள் பங்கேற்றுள்ளார்கள். ஸ்கொட்லாந்தின் டன்பார் என்னும் இடத்திலேயே இந்தப் போட்டி நடைபெற்றிருக்கின்றது. இது தலைநகரான எடின்பரோவுக்கு அண்மையான ஓர் இடமாகும். சிறிய கற்பாறைகள், கற்கள் போன்றவற்றை கலைநுணுக்கத்தோடு அடுக்குவதுதான் இந்தப் போட்டி.

பாறைகளைப் புரட்டுவதால் சரித்திரம் அழிக்கப்படுகிறது என்று சில குற்றச்சாட்டுகளும் எழாமல் இல்லை. என்றாலும் சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போட்டி, இரண்டாவது தடவையாக இந்த ஆண்டும் வெற்றிகரமாக நடந்தேறி இருக்கின்றது. இந்த ஆண்டும் ஸ்பெயின் கலைஞர் ஒருவரே வெற்றிவாகை சூடியுள்ளார். பெட்ரோ டுறான் என்ற பெயர் கொண்ட இவர், கடந்த ஆண்டும் முதலிடத்தைப் பிடித்திருந்தார். அடுத்த ஆண்டு அமெரிக்காவின் ரெக்ஸாஸ் மாநிலத்தில் இடம்பெறவுள்ள இன்னொரு உலகளாவிய போட்டியில் இவர் கலந்து கொள்ள நிதி உதவி அளிக்க இருக்கிறார்கள்.

பிரித்தானியரான 46வயது ஜேம்ஸ் பிரன்ட் என்பவருக்கு இரண்டாவது இடம் கிடைத்துள்ளது. ஏழு வருடங்களுக்கு முன்பு, ஒரு கடற்கரைப் பிராந்தியத்தில் எவரோ ஒருவர் கல் அடுக்குவதைப் பார்த்ததன் தாக்கம் இது என்கிறார் ஜேம்ஸ். இதிலுள்ள கலைநுணுக்கம் என்னை மிகவும் கவர்ந்திழுத்தது என்கிறார் இந்தப் போட்டியாளர்.

போட்டி நடைபெறும் இரு நாட்களிலும், வெவ்வேறு வகையான 4 போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. 3 நிமிடங்களில் மிக அதிகமான கற்களை அடுக்குவது யார் என்பது ஒரு போட்டி. கலையழகு மிக்கது எது என்றறியும் இன்னொரு போட்டி, ஜூனியர் சாம்பியன்ஷிப், பொதுவான கல்லடுக்கும் சாம்பியன் தெரிவுப் போட்டி- இந்த நான்குமே அந்தப் போட்டிகள். பழைமைகள் புதுப்பிக்கப்படுவது என்றுமே வரவேற்கப்படக்கூடியதே.

# பிறந்த கோலத்தில் போராட்டம்



பிறந்த கோலத்தில் நின்றாவது பழிவாங்குவோம் என்ற படலத்தில் இறங்கியிருக்கிறார் ஜேம்ஸ் பென்டிஸ் என்ற அவுஸ்ரேலியர்!.

புதிதாக வந்த அயல்வீட்டுக்காரர் தனது தனியுரிமையைப் பறித்து விட்டார் எனக்கூறி வெகுண்டுபோய் நிற்கிறார் இவர். வெறும் காணியாக இருந்த அயலில், புதிதாக ஒரு வீடு கட்டப்படத் தொடங்கியமை, தன் தனியுரிமையைப் பறிப்பதாக அமையப் போகிறது என்று கவுன்சிலில் முறைப்பாடு செய்துள்ளார். எதிர்வீட்டு அறைச் சாரளங்களுக்கு, வெளியே எதுவுமே தெரியாத வகையில் பிரத்தியேக கண்ணாடி பொருத்தப்படும் என்று கவுன்சில் அதிகாரி தொடக்கம் கட்டட தொழிலாளிகள் வரை வாக்குறுதி அளித்திருந்தார்கள். ஆனால் கேட்டது நடக்கவில்லை.

கோபத்தின் உச்சிக்கு சென்றுவிட்டார் ஜேம்ஸ். விட்டேனா பார் என்ற உறுமிக் கொண்டு, தன் வீட்டுக்கு முன்னால் பிறந்த கோலத்தில் உலாவ ஆரம்பித்து விட்டார் இவர். இங்கே என்ன நடக்கின்றது என்று பார்க்க ஆசைப்படுகிறீர்கள் போலிருக்கின்றது. நன்றாக இந்தக் கிரேக்கனின் ஆண்மையைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிக் கொண்டு, தன் வீட்டு வெளிச்சவருக்கு பெயின்ட் அடிக்கும் வேலையையும் ஆரம்பித்துள்ளார். வேலை நேரம் ஆடைகள் எதையும் அணிவதில்லை. பிறப்பால் கிரேக்கரான இவர் அவுஸ்ரேலியாவின் மெல்பேர்ன் நகரையொட்டிய ஒரு பிரதேசத்தில் வசித்து வருகிறார். இவர் தொழிலால் ஒரு படப்பிடிப்பாளர்.

எதிர்வீட்டுச் சாரளங்கள் , சட்டப்படி தன் வீட்டிலிருந்து 3 மீற்றர் தொலைவில் இருந்தாலும், இந்த சாரளக் கண்ணாடிகள் மறைக்கப்படவில்லை என்பதே இவர் கோபம்.

நியாயமான கோபம்தானே?

# பணம் கொட்டும் கரப்பான் பூச்சிகள்



சீனாவின் ஒரு பண்ணையில், ஆண்டுக்கு 7 பில்லியன் கரப்பான் பூச்சிகளை வளர்த்து வருகிறார்கள் என்பது ஆச்சரியமான, அருவருப்பான செய்தியாக இருக்கிறதா? தேடித் தேடி நாம் அழிக்கின்ற கரப்பான் பூச்சிகளை இவர்கள் எதற்கு வளர்க்கிறார்கள் என்ற கோபம் வருவது. நியாயம்தான்.

ஆனால் சீனாவில் மில்லியன் கணக்கானவர்களுக்கு மருந்து தயாரிக்க இவை பயன்படுகின்றன என்ற செய்தியைக் கேட்கும்போது மனம் சந்தோசப்படுகின்றது.

ஒரு சிறைச்சாலையைப் போல, அமைந்துள்ள இந்தப் பண்ணை எப்பொழுதும் இருட்டாகவே இருக்கும். இங்குள்ள இந்தப் பூச்சிகள் சூரியனைக் காண்பதில்லை. உலகின் சனத்தொகையைவிட அதிகமான கரப்பான் பூச்சிகள் இங்கே உற்பத்தியாகின்றன.


சீனாவில் கரப்பான் பூச்சி வளர்க்கும் நிலையங்கள் பல இருந்தாலும், சீனாவின் தென் மேற்கிலுள்ள சிச்சுவான் பிராந்தியத்திலுள்ள இந்தப் பண்ணைதான் சீனாவின் மிகப்பெரிய பண்ணை என்பதோடு, உலகின் மிகப்பெரிய கரப்பான்பூச்சி பண்ணையும் இதுதான்!

சமீபத்திய அரச அறிக்கை ஒன்றின்படி, கரப்பான் பூச்சிப் பண்ணைகளால் 684 மில்லியன் டொலர் - சுமார் 10 ஆயிரத்து 716 கோடி இலங்கை ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளதாம்.

எதிலும் பணம் எங்கும் பணம்!

# இப்படியே போனால் தாங்காது பூமி...!

## மாறுகிறது கப்பல் எரிபொருள்



■ புவியரசன்

கடந்த 50, 60 ஆண்டுகளாக வளர்ச்சியை நோக்கி அசுர வேகத்தில் முன்னேறிய வளர்ந்த நாடுகளுக்கும் சரி, வளர்ச்சியைக் குறிக்கோளாக கொண்டு இயங்கும் வளரும் நாடுகளுக்கும் சரி, இந்த வளர்ச்சிப் பந்தயத்தில் துளியும் பங்கு கொள்ளாத ஏழ்மை நாடுகளுக்கும் சரி, காலநிலை மாற்றம் என்பது மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் விளைவுகளைச் சமாளிப்பதும் மிகப்பெரிய பிரச்சினையான, இதனைக் கட்டுப்படுத்துவதற்கும்தான் பல்வேறு முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்படுகின்றன. இது ஒருபுறம் என்றால் காலநிலை மாற்றத்துக்கான பொறுப்பாக வளர்ந்த நாடுகள் செயற்பட வேண்டும் என்ற வாதம் தொடர்ந்து முன்வைக்கப்படுகின்றது. சில வளர்ந்த நாடுகளைத் தவிர மற்ற வளர்ந்த வல்லரசு நாடுகள் இந்த வாதத்தை எதிர்க்கின்றன. அந்தப் பொறுப்பில் இருந்தும் நழுவிக் கொள்கின்றன. ஆனால், அவ்வப்போது காதில் விழும் சில அறிவிப்புகள்தான் காலநிலை மாற்றத்தை நம்மால் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையையும் தருகின்றன. கடந்த வாரம் அப்படியான அறிக்கை ஒன்று வெளியாகி இருக்கிறது. சர்வதேச கப்பல் துறையானது காலநிலை மாற்றத்தைக் கருத்தில் கொண்டு கார்பன் வெளியீட்டைக் கட்டுப்படுத்தும் என்று சர்வதேச ஒப்பந்தமிட்டுள்ளனர்.

கடந்த இரண்டு வாரங்களாக லண்டனில் நடைபெற்ற கூட்டத்தில் சர்வதேச கடல்சார் அமைப்பைச் (International Maritime Organization (IMO)) சார்ந்த 170 நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி இந்த முடிவை எடுத்துள்ளனர். பூமியில் இருந்து பல்வேறு வகையில் வெளியிடப்படும் கார்பனின் கூட்டு வாயுக்களே காலநிலை மாற்றத்தின் முக்கிய காரணிகளாக இருக்கின்றன. 2050ஆம் ஆண்டுக்குள் சர்வதேச கப்பல் துறையின் மூலம் வெளியேறும் கார்பனீர்ரொக்சைட் அளவைக் குறைந்தது 50 விழுக்காடாகக் குறைக்க திட்டமிட்டுள்ளனர் சர்வதேச கடல்சார் அமைப்பினர். அதுமட்டுமில்லாமல் 2030 இற்குள் புதிதாக உருவாக்கப்படும் கப்பல்கள் அனைத்தும் மரபுசாரா எரிபொருள்களைப் பயன்படுத்தும் வண்ணம் கட்டமைக்கப்படும் என்றும் - அந்த ஒப்பந்தத்தில் கூறியுள்ளனர். சர்வதேச அளவில் இயங்கக்கூடிய ஒரு துறையிலிருந்து முன்னெடுக்கப்படும் இந்த முயற்சியானது மற்ற அனைத்துச் சர்வதேசத் துறைகளுக்கு முன்மாதிரியாக அமையும் எனச் சொல்கின்றனர்.

**Shipping கடல்சார் அமைப்பு**

உண்மையில் ரயில், லொறி, இன்னும் பல கனரக வாகனப் போக்குவரத்தைவிட கப்பல் போக்குவரத்து சுற்றுச்சூழலுக்கு உகந்தது. ஏனென்றால் ரயில், லொறி போன்றவற்றைக் காட்டிலும் ஒரு கிலோ மீற்றருக்கு குறைந்த அளவு கார்பனை வெளியேற்றுவது கப்பல்தான். ஆனால், தொழில் வளர்ச்சியும் கப்பல் துறையின் அதீத வளர்ச்சியும் கார்பன் வெளியீட்டை அசுர வேகத்தில் அதிகமாக்கிவிட்டன. அதுமட்டுமில்லாமல் கப்பல்களில் பயன்படுத்தப்படும் சுத்திகரிக்கப்படாத டீசல்கள் (Heavy Diesel) மூலம் வெளியாகும் அதிக அடர்த்தியுடைய கறுப்பு கார்பன்கள் (Black Carbon). இவை வேகமான காலநிலை மாற்றத்தை உருவாக்கக் கூடியவை. இந்த வகையான டீசல்கள் பல்வேறு நாடுகளிலும் தடை செய்யப்பட்டுள்ளன. உலகம் மொத்தம் நடக்கும் வாணிபத்தில் 80விழுக்காடு கப்பல்துறையின் மூலம்தான் நடைபெறுகிறது. இதிலிருந்தே அதன் அதீத வளர்ச்சியைப் புரிந்துகொள்ள முடியும். சர்வதேச கப்பல் துறையின் மூலம் ஆண்டுக்கு 800 தொன் கார்பன் வாயுக்கள் வெளியிடப்படுகின்றன. உலக அளவில் நடைபெறும் பசுமை இல்ல வாயு வெளியீட்டில் இது 2.5விழுக்காடு. இந்தத் துறையை ஒரு நாடாகக் கணக்கில் எடுத்தால் உலகிலேயே பசுமை இல்ல வாயுக்களை வெளியேற்றும் ஆறாவது நாடாக இந்தத் துறை இருக்கும். இது ஜேர்மனிக்கு நிகரானது.

ஆனாலும் இப்போது எடுக்கப்பட்டிருக்கும் முடிவு மிகச்சரியான நேரத்தில் எடுத்த முடிவாகச் சொல்ல முடியாது. காரணம் காலநிலை மாற்றம் தொடர்பாக 1997இல் நடைபெற்ற கியோட்டோ நெறிமுறையிலும் (Kyoto Protocol) 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பாரீஸ் ஒப்பந்தத்திலும் (Paris Summit) சர்வேதச கப்பல் துறை எளிதாக நழுவிவிட்டது. காரணம் வளர்ந்த நாடுகளின் ஆதரவு. பல சூழலியல் அழுத்தங்களால் இந்த முடிவுக்கு வந்துள்ளனர் சர்வதேச கடல்சார் அமைப்பினர். இந்த முடிவால் எடுக்கப்படும் முயற்சிகளால் தங்கள் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு விடுமோ என பல்வேறு நாடுகளும் அச்சத்தில் இருக்கின்றன. சர்வேதச அளவில் இயங்கும் இந்தத் துறைறை நாடுகளால் கட்டுப்படுத்துவதும் கடினமான விஷயம்தான்.

**கார்பன் வெளியேற்றம்**

கார்பன் வெளியீட்டைக் கட்டுப்படுத்த கப்பல் துறையினர் முன்னெடுக்கும் முயற்சியாக இருப்பது மரபுசாரா எரிபொருளைப் பயன்படுத்துவது. சூரிய ஒளி ஆற்றல், காற்றின் வழி மின்சாரம் பெறுதல், பற்றரிகள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம். நீண்ட தூரம் பயணிக்கக் கூடிய கப்பல்களுக்கு இவையெல்லாம் போதுமானதாக இருக்குமா என்பதும் கேள்விக்குறிதான். சர்ச்சைக்குரிய அணுமின் மூலமும் கப்பல்களை இயக்கலாம். பல்வேறு போர்க் கப்பல்களும் அணுமின்சாரத்தால் இயங்குவதை அறிவோம். மரபுசாரா எரிபொருள்களை மேம்படுத்த வேண்டிய நேரமும் தேவையும் வந்திருக்கிறது. அதற்கான ஆயத்தங்களையும் மேற்கொள்ள வேண்டும்.

கார்பன் வெளியீட்டைக் குறைந்தது 50விழுக்காட்டால் குறைப்பதாகக் கூறியுள்ள சர்வதேச கடல்சார் அமைப்பு அதனை 100 விழுக்காடு வரை அதிகரிக்கவும் வாய்ப்பிருக்கிறது. காலநிலை மாற்றத்தால் உயரும் கடல்நீரால் மூழ்கும் நிலையில் இருக்கும் தீவு நாடுகள் இந்த முயற்சியை வரவேற்றுள்ளனர். ஆனால் பிரேஸில், சவூதி அரேபியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் இந்த சர்வதேச ஒப்பந்தத்தை எதிர்க்கின்றன. அப்போதும் கூட 2008 இன் கார்பன் வெளியீட்டு அளவை வைத்தே இந்த ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. காலநிலை மாற்றத்துக்கு துறைரீதியாக முயற்சிகள் எடுப்பதும் மிக முக்கியமான விஷயம். சர்வதேச அளவில் கப்பல் போக்குவரத்தும் வான்வெளிப் போக்குவரத்தும் தான் கார்பன் வெளியீட்டை அதிகமாக ஏற்படுத்துகின்றன. சர்வதேச கப்பல் துறையின் இந்த மற்ற துறைகளுக்கும் அழுத்தம் கொடுக்கும் வகையில் அவர்கள் தொடர்ந்து செயலாற்ற வேண்டும். ●

■ ஜெயராணி

# வயதுவந்தோர்க்கு மட்டும் 23

இன்னொரு வீடு. கணவன் குடும்பத்தை மனைவி கேவலமாகப் பேச, மனைவி வீட்டாரை கணவன் ரொம்பக் கேவலமாகப் பேச... இதுதான் அவர்களுக்குப் பொழுதுபோக்கே! “சோத்துக்கு அலையுறாங்க”, “காசுக்கு அலையுறாங்க” என மாற்றி மாற்றி இழிவுபடுத்திக் கொள்வார்கள். பெற்றோர்கள் பற்றியும் சகோதரர்கள் பற்றியும் புறம் பேசும்போது அது குழந்தையின் காதுகளை எட்டுகிறதா என எத்தனை பேர் திரும்பிப் பார்த்திருப்போம். இன்னும் சொல்லப்போனால், பாட்டி- தாத்தா, அத்தை- மாமா, சித்தி - சித்தப்பா பற்றிக் குழந்தையிடமே தவறாகச் சொல்வது இங்கே ‘கலாசார’மாகவே இருக்கிறது. உறவுகள் மீது அன்பும் மதிப்பும் இல்லாமல் போவதுடன், மிக மிக சுயநலமாகக் குழந்தை வளர இதுவே காரணமாகிறது.

மற்றுமொரு குடும்பம். வியா பாரத்தில் நட்டம், குடும்பத்தில் பிரச்சினை, உடம்பு சரியில்லாமல் போவது என வாழ்க்கையில் என்ன கேடு நடந்தாலும் ஜோதிடம் பார்க்கக் கிளம்பிவிடுவார்கள். எந்தச் செயலுக்கும் தாங்கள் பொறுப்பேற்காமல் “கட்டம் சரியில்லை, குரு அங்க போயிட்டார், சனி இங்க வந்துட்டார்” எனப் புலம்புவார்கள். யாரையும் மதிக்காமல், சரியாகப் படிக்காமல் எப்போதும் அடம்பிடிக்கும் தன் குழந்தையின் ஒழுக்கக் குறைபாட்டைக்கூடப் பரிகாரம் செய்து சரிபடுத்த வேண்டிய பிரச்சினையாகவே பார்த்தனர். இத்தகைய குடும்பத்தில் வளரும் குழந்தை என்ன கற்கும்?

மேலும் ஒரு வீடு. ‘நம்ம பிள்ளைய காதலிச்சிட்டான்... சும்மா விடக் கூடாது, நாம யாருனு புரிய வைக்கணும். தூக்குத் தண்டனை கிடைச்சாலும் பரவாயில்லை. நம்ம கௌரவத்தைக் காப்பாத்தியாகணும்” என அப்பா, சித்தப்பா, மாமன்கள் அடித்தொண்டையில் முழங்க, அவ்வீட்டில் உள்ள சிறுவர்கள், கௌரவம் என்பது பிறரைத் தாழ்த்தியும் ஒடுக்கியும் பெறவேண்டிய ஒன்றாக நம்பத் தொடங்குகின்றனர். எதிர்காலத்தில் குற்றம் இழைக்க அதுவே ஊக்க மருந்தாகிறது.

சக மனிதர்களின் சமத்துவ நல்வாழ்விற்கு எதிரான நம் வன்மங்களை நாம் குழந்தைகளிடம் இருந்து ஒளித்து வைப்பதில்லை. சாதியால் தாழ்த்தப்பட்ட சக மாணவனை ஆதிக்க உணர்வோடு உங்கள் வீட்டுப் பிள்ளை தாக்கிவிட்டு வந்தால் பெற்றோர்கள் பெருமைப்படும் அவலம் இந்தக் காலத்திலும் இருக்கிறது. மனித நல்லுறவுக்கு எதிரான வன்மங்களும் பாகுபாடுகளும் குழந்தைகளுக்குக் கடத்தப்படவில்லை எனில் ஆதிக்கம் எனும் தொடர் சங்கிலியின் கண்ணி அறுந்துவிடும் என்பதால், பாலூட்டும்போதே இந்த நஞ்சையும் ஊட்டுகிறோம்.

அடுத்து ஒரு வீடு. மனைவிக்கு வைர நகை வாங்கி வருகிறார் கணவர். ‘எப்படி இவ்வளவு காசு வந்தது என்ற கேள்விக்கு, இன்னிக்கு ஒபிஸில நல்ல கலெக்‌ஷன் என்கிறார். இதைப் பார்க்கும் பருவ வயதுப் பையன், ‘அப்பா, எனக்கு பைக் வேணும்’ எனக் கேட்கிறான். அடுத்தது உனக்குத்தான் என்கிறார் பாசமொழுக. ஊழல் செய்வதும் லஞ்சம் வாங்குவதும் கொலைக்கு இணையான குற்றம் என்பதை மாற்றி, அதை வசதியாக வாழ்வதற்கான வழியாக்கிய பெற்றோர், பிள்ளைகளையும் அவ்வாறே பிழைக்கப் பழக்குகின்றனர்.

பாடசாலை அனுமதிக்கு லஞ்சம், வேலைக்கு லஞ்சம் என சாமானியர்களாகிய நம் வாழ்க்கையில் இரண்டறக் கலந்ததாக ஊழல் இருக்கையில் அரசியல்வாதிகளின் ஊழல் குறித்து மட்டும் ஆவேசப்படு கிறோம். அரசியல்வாதியின் மகன் தரகுப் பணம் பெறுவதை பள்ளிப் பருவத்திலேயே கற்கிறான். அரசாங்க ஊழியரின் வாரிசுகளுக்கு ஒரு ஃபைலை அடுத்த மேசைக்கு நகர்த்தக்கூட விலை உண்டு எனத் தெரியும். எத்தனை பேரை ஒப்ரேஷனுக்கு அனுப்பினால், சுற்றுலா போகலாம் என டொக்டரின் பிள்ளைகள் அறிவார்கள். இந்த ஊழலின் ஊற்றுக்கண் யார்? பெற்றோரும் குடும்பங்களும் தானே!

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். குழந்தை வளர்ப்பு என்பது வெறுமனே சோறூட்டு வதன்று தாலாட்டு பாடித் தூங்க வைப்பதன்று படிக்க வைப்பதன்று, சம்பாதிக்கக் கற்றுத் தருவதன்று மனிதரை மனிதராக வளர்த்தெடுக் கும் பெருங் கடமை அது. பாதைகளற்ற மலையில் ஏறுவதைப் போல அடிக்கு அடி நாம் கவனத்துடன் செயலாற்ற வேண்டிய களம் அது. உங்கள் வீட்டுக்கு வெளியே குப்பையைக் கொட்டுகிறீர்கள் என வைத்துக்கொள்வோம். தினமும் கொட்டுகிறீர்கள். அந்த இடம் நாறத் தொடங்குகிறது. கொசுக்களும், விஷப்பூச்சிகளும் மொய்க்கின்றன. அப்படித்தான் குப்பை போடுவேன், என்னை யாரும் கேட்கக் கூடாது என நீங்கள் சொல்ல முடியுமா?

அதேபோல உங்கள் வீட்டில் ஒரு நாய் வளர்க்கிறீர்கள். மூர்க்கமான குணம் கொண்ட அந்த நாய், போவோர் வருவோரை எல்லாம் கடித்து வைக்கிறது. அப்படித்தான் என் நாய் எல்லோரையும் கடிக்கும் என அமைதியாக இருக்க முடியுமா?

நம் வீட்டிலிருந்து குப்பையோ, நாயோகூட வெளியில் மற்றவருக்குத் தொல்லையாக மாறக் கூடாது எனும்போது, வீடுகளிலிருந்து உற்பத்தி செய்து அனுப்பப்படும் மனிதர்கள் இச்சமூகத்தில் ஏற்படுத்தும் விளைவுகளுக்கு வீடுகள் பொறுப்பேற்க வேண்டுமா இல்லையா? நாள்தோறும் அத்தனை வயது வந்தோருக்கான தவறுகளையும் குழந்தைகள்முன் நிகழ்த்திவிட்டு, குழந்தை மட்டும் சரியாக வளர வேண்டும் என்றால் எப்படி? (இன்னும் பேசுவோம்)



## குழந்தை வளர்ப்பு என்பது...

**புனித காரியமில்லை!**

நமக்கு ஒரு கெட்ட பழக்கம் இருக்கிறது. எதையும் புனிதப்படுத்தி அகற்றுவது. பெண்களைப் புனிதப்படுத்தி உரிமைகளைப் பறித்தோம். இதேபோல குழந்தைகளும் நம்மிடம் படாதபாடுபடுகின்றனர். தெய்வத்திற்கு இணை என்போம். ஆனால், அடிப்படை உரிமைகளைக்கூடப் பறித்துவிட்டோம். புனிதப்படுத்தாதீர்கள். குழந்தை பிறந்தால் செல்வம் பிறந்தது, அதிர்ஷ்டம் பிறந்தது என்றெல்லாம் சொல்லாமல், கடமை பிறந்ததாக உணருங்கள். அதனால் இந்தச் சமூகத்திற்கு நன்மை உண்டாகிறதோ இல்லையோ தீமை உண்டாகக்கூடாது.

**சுமை தூக்கும் வேலையன்று!**

குழந்தை பிறந்ததும் பெற்றோர் தம்மை சுமை தூக்குபவராக மாற்றிக் கொள்கின்றனர். ஏன் இவ்வளவு பில்டப்? வாழ்க்கை ஒன்றும் அவ்வளவு எதிர்மறையானதோ, பாரமானதோ அன்று. நம் ஆசைகள்தான் அதைச் சுமையானதாக மாற்றுகிறது. எட்டாத இலக்கை நிர்ணயித்துக்கொண்டு ஓடத் தொடங்குகிறோம். ஓடி ஓடி சலிக்கிறோம். ஒரு கட்டத்தில் ‘அடச்சே, இந்தக் குழந்தைக்காகத்தான் இவ்வளவு ஓட வேண்டியிருக்கிறது’ என அலுப்பு வருகிறது. குழந்தையைச் சுமையாக மாற்றாதீர்கள். சுதந்திரமாக விடுங்கள். இலகுவாக உணர்வீர்கள்.

**செலவை அதிகரிக்கும் தொல்லையன்று!**

பசிக்கு உணவு, மாற்று உடை, இருப்பதற்கு ஒரு கூரை இவைதாம் அடிப்படைத் தேவை. மற்றவையெல்லாம் தேவையி இல்லாதவைதான். அப்படி எனில் நாம் எவ்வளவு பேராசைப்படுகிறோம் என நினைத்துப் பாருங்கள். உண்மையில் சின்னச் சின்ன விஷயங்களில் மகிழ்ச்சியடையும் பண்புதான் குழந்தையின் குணம். நாம் அவர்களுக்கு பிரமாண்டங்களைப் பழக்கப்படுத்துகிறோம். பெரிய வீடு, பெரிய ஸ்கூல், பெரிய கார், பெரிய வாழ்க்கை இவையெல்லாம் நாம் சொல்லித் தருகிறோம். அடிப்பகுதி இல்லாத பாத்திரத்தை உங்களால் ஒருபோதும் நிரப்ப முடியாது. எளிமைக்குப் பழக்கப்பட்ட குழந்தை எல்லாச் சூழலையும் சமாளித்து வாழும். அந்த வாழும் கலையைக் கற்பித்து நீங்கள் சுதந்திரமடையுங்கள்.

**வாரிசு உற்பத்தியன்று!**

நாம் அப்படித்தான் நினைக்கிறோம். ஆனால், உண்மை அதுவன்று. உங்களுக்கு மகனாகவோ மகளாகவோ பிறந்தாலும் இந்த சமூகத்தின் ஓர் அங்கமாக, உலக உயிரியல் விருத்தியின் தொடர்ச்சியாக, தலைமுறையின் பங்களிப்பாக, கூட்டத்தில் ஒருவராகவே குழந்தை வாழப்போகிறது. சுயநலனோடு வாழப் பழக்காதீர்கள். எல்லோருடனும் கலந்து வாழும் கூட்டு வாழ்க்கைக்குத் தயார்ப்படுத்துங்கள். வாரிசு என்பது ஒருவித மாயை. சமூகத்தோடு ஒன்றாமல் தனிநபராக மகிழ்ச்சியாக வாழ்ந்துவிட முடியும் என்ற அறியாமையை உடனே பொசுக்குங்கள். அது மிக மிக ஆபத்தானது.

**சொந்த விடயமன்று!**

குடும்பங்கள் இந்த பூமிக்கு ஏதேனும் பங்காற்றுகின்றன எனில், அது குழந்தை பெறுவதே. பின் அது எப்படி சொந்த விஷயமாகும். உங்கள் வீட்டில் ஒரு குழந்தை பிறந்தால் உங்கள் சமூகப் பொறுப்பு இரட்டிப்பாகிறது. பொறுப்புடன் செயற்படத் தயாராகுங்கள்.

# அலம்பல் ஆச்சி



என்ன பிள்ளையள் எல்லாரும் எப்படி இருக்கிறியள்...? கனகாலமா காணேல்ல ஒருவேளை கிழவி மண்டையப் போட்டுட்டுதோ என்று யோசிச்சிருப்பியள் - இல்லாட்டி கிழவியோட அலம்பல் இல்லை எண்டு சந்தோசப்பட்டிருப்பியிள் என்ன?

எண்டாலும் என்னைக் காணேல்ல என்டோன ரெண்டு மூண்டு பேர் காயிதம் போட்டவை. ஏதோ மெயிலிலயும் ஒரு சிலர் கேட்டவையாம் எண்டு "பொடி" சொல்லிச்சுது. அதுதான் வந்திட்டன்.

ஆச்சியிட பிள்ளையள் அஞ்சில நாலு வெளியில எண்டு தெரியும்தானே...? அதுகள் அங்க வரச்சொல்லி ஒரே அரியண்டம். அதுசரி கண்ணை மூடுறதுக்குள்ள ஒரு நாட்டையாவது போட்டு வந்திடுவம் எண்டு பிரான்ஸூக்குப் போட்டு வந்தனான். அங்க குளிரில விறைச்சு செத்துப் போடுவன் எண்டு போட்டு இஞ்ச வந்தா இங்கை வெயிலில வெந்து செத்திடுவன் போல கிடக்கு...!

என்ர வயசுக்கு இப்படி ஒரு வெயில நான் பார்க்கல. அந்தக் காலத்தில் கோடை வெயிலடிச்சாலும் றோட்டில நிற்கிற மரநிழலிலயோ வீட்டுத் திண்ணையிலயோ இருந்து இளைப்பாறிட்டு, பானையில இருக்கிற தண்ணில் ரெண்டு பேணி குடிச்சிட்டுப் போவம். இப்ப என்னடா வெண்டால் எங்க பார்த்தாலும் வீடுகளும் கந்தோருகளும் கடைகளும் எண்டு ஒரே கட்டடக் காடெல்லோ கிடக்குது. றோட்டில மருந்துக்குத் தன்னும் மரத் தையோ, நிழலையோ அல்லாட்டி திண்ணை யையோ காணேல்ல எல்லாம் காலக்கொடுமை.

வெக்கை தாங்காம சனமெல்லாம் வீட்டுக்குள்ளை அடைஞ்சுகொண்டு வெயிலப் போட்டு ஏசுதுகள். ஆனா அதுகள் ஒண்டையும் யோசிக்காம மரங்கள தறிச்சுக் கொட்டினதை எல்லாம் மறந்து போச்சுதுகள்... நான் என்ன சொல்ல வாறன் எண்டு விளங்குதே உங்களுக்கு...?

மழையில்ல வெயில் வெக்கை தாங்க முடியல என்ன செய்யிறது நாங்கதானே எல்லா மரங்களையும் அழிச்சுப்போட்டு கட்டடக் காடுகளை உருவாக்கினம் பிள்ளையள். அதிட பலனை நாங்கதானே அனுபவிக்கனும்... ஆனாலும் ஆச்சிக்கு சாகிறதுக்கிடையில ஒரு ஆசை இருக்கு... என்னெண்டு கேக்கிறியளே...?

முந்திப் பெடியளிட காலத்தில வீதிக்கு வீதி மரங்களை நட்டு பராமரிச்சவங்கள்- காடுகள் அழியுதெண்டு காடுகளையும் திருப்ப வளர்த்தவங்கள் இப்பவும் அதமாதிரி காடுகளை உருவாக்கனும்... பிள்ளையள். எனக்கு உந்த அரசியல்வாதியளிலயும் அதிகாரிகளிலயும் நம்பிக்கையில்ல. இளம்பிள்ளையளிட கையிலதான் எல்லாம் இருக்கு எண்டு நம்பிறன். அதாலதான் இத உங்களிட்ட சொல்லிறன். இந்தக் கிழவி கண்ணை மூடுறதுக்குள்ள எங்கட தேசம் பசுமையா இருக்கிறதயும் கோடை வெயிலில வெறுங்காலில நடந்து போறதையும் நான் பார்ப்பன் எண்டு நம்பிறன்.

எல்லாரும் ஒண்டாச் சேர்ந்து இயற்கையை வாழ வைத்து நாங்களும் வாழுவம்... அப்ப நான் வரட்டே பிள்ளையள்...!

## போனாவும்...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வேளை வைத்தியர் போன்று வேடமிட்டு நஞ்சு ஊசியுடன் வந்தனர் புளொட்டினர். அவர்களை இனங்கண்டு சத்தமிடவே வைத்திய சாலைப் பணியாளர்கள் வந்து வேணுதாஸைக் காப்பாற்றினர்.

1989 ஆம் ஆண்டு முற் பகுதியில் மட்டக்களப்பு விடுதலைப் புலிகள் இயக்கம் தற்போதைய பொலன்னறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழரின் பூர்வீக நிலமான மன்னம்பிட்டி என்று அழைக்கப்படுகின்ற தம்பன்கடவை வட்டத்திற்குட்பட்ட பகுதியில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட பிரதான முகாம் அமைந்திருந்தது. வெலிக்கந்தைக்கு கிழக்கே திருக்கோணமடு என்ற இடத்தில் தங்கியிருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை நித்தியும் சரவணபவானும் (இவர் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக செயற்பட்ட மேஜர் பிரான்சிஸ் அவர்களின் அண்ணன்) சந்தித்து விடுதலைப் போராட்டத்தில் முழுநேர உறுப்பினரானார்கள் .

அதன் பின்பு நித்தியும், சரவணபவானும் கொழும்பு நகரில் விடுதலை இயக்கத்திற்குத் தேவையான சில வேலைத்திட்டங்களை மேற்கொண்டனர். இக்காலத்தில் சரவணபவானும் மேலும் இருவரும் புலனாய்வாளர்களால் கடத்தப்பட்டனர். அவர்கள் பற்றி எந்தவித தகவலும் அறிய முடியாததனால் சரவணபவான் வீரச்சாவடைந்து விட்டார் என்று விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்தது. இந்திய படையினர் எமது மண்ணைவிட்டு வெளியேறிய பின்பு மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய மாபெரும் கூட்டத்திற்கு நித்தி சீருடையுடன் ஒரு போராளியாக தலைமை தாங்கினார்.

1990 ஆம் ஆண்டு முற்பகுதியில் இவர் "கொண்டல்" என்னும் வார இதழை வெளியிடத் தொடங்கினார். இது மட்டக்களப்பில் தமிழ் மக்களின் தேசிய பத்திரிகையாக விளங்கியது. இவர் இன்று இருந்திருந்தால் 40ஆண்டுகள் பத்திரிகைத் துறையில் பணியாற்றியவராக வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருப்பார். 26 04 .1992 நாள் அன்று கொத்தியாவலையிருந்து புறப்பட்ட இவர் குறிஞ்சாமுனை - கன்னன்குடா ஊருக்கு பணியின் நிமிர்த்தம் செல்கின்றபோதுதான் எதிர்பார்க்காத அந்நிகழ்வு நடந்தது. குறிஞ்சமுனைக்கும் கன்னன்குடாவுக்கும் இடையில் பதுங்கி, மறைந்திருந்த இராணுவத்தினரின் தாக்குதலில் கப்டன் நித்தியும் வீரவேங்கை பாலுமகேந்திராவும் (கணபதிப்பிள்ளை உருத்திரா, ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று) வீரச்சாவடைந்தனர்.

போராளியாக மாறிய மகத்தான சேவையாளன், தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்கு ஊடகப் பாலமான சிறந்த பத்திரிகையாளன் கப்டன் நித்தி என்றும் எம் நினைவில் நிலைத்து நிற்பார்.

## கோட்டை...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)


கோயில்" அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

1984 - 1987 காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தின் பெரும் பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோதும், யாழ்ப்பாணக் கோட்டை இராணுவத்தின் வசமே இருந்து வந்தது. 1989 ஆம் ஆண்டில் இந்திய அமைதி காக்கும் படை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறிய பின்னர், கோட்டையை முற்றுகையிட்ட புலிகள் பல மாதங்களின் பின் அதனைக் கைப்பற்றினர். கைப்பற்றிய சிறிது காலத்தில் மீண்டும் இவ்வாறான நிகழ்வைத் தடுக்க கோட்டையின் பெரும் பகுதி புலிகளின் ஆலோசனையின் கீழ் அழிக்கப்பட்டது. 1995 இல் யாழ்ப்பாணத்தை இலங்கை இராணுவம் மீண்டும் கைப்பற்றியபோது இந்தக் கோட்டையின் எச்சங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் வந்தன.

யாழ்ப்பாணக் கோட்டையானது ஆங்கிலேயர் ஆட்சியில் யாழ்ப்பாண வரி சேகரிப்பு பிராந்தியத்தின் நிர்வாக மையமாக மாறியமை குறிப்பிடத்தக்கது. ஒல்லாந்தரின் படைவீரர்கள் தங்கியிருந்த பாசறை வீடுகள் ஆங்கிலேயர் காலத்தில் சிறைச்சாலைக் கட்டடமாக மாற்றியமைக்கப்பட்டன. 1987 ஆம் ஆண்டு விக்டோரியா மகாராணியின் அறுபதாவது ஆட்சி நிறைவு யாழ்ப்பாணக் கோட்டையில் கொண்டாடப்பட்டது.

சமகால ஆய்வுகளின்படி யாழ்ப்பாணக் கோட்டையின் வரலாற்றுப் பழைமை 2200 வருடங்களுக்கு முன்னதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது 2200 வருடங்களுக்கு முன் வணிக மையமாக இந்தப் பகுதி விளங்கியுள்ளது. இதற்கு சான்றுரைக்கும் வகையில் உரோம், சீனா, சதானியர்களது மட்பாண்டத் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இன்னொருவகையில் நோக்கினால் அநுராதபுர இராச்சிய காலத்தை ஒத்த சமகாலத்து வர்த்தக மையமாக இது விளங்கியிருக்கவேண்டுமெனக் கூறப்படுகிறது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யாழ்ப்பாணக் கோட்டை இன்று முதல் எவ்வாறிருந்ததோ அதே வடிவத்தில் சிதறுண்டு, சிதைந்துபோன பகுதிகள் புனரமைக்கப்பட்டு, வரலாற்றுச் சொத்தாக சுற்றுலா மையமாக மாற்றியமைக்கும் செயற்பாடு



நிகழ்ந்துவருகின்றது. இதனூடாக யாழ். கோட்டையின் பழைமையும் யாழ்ப்பாண மண் வாசனையும் தொடர்ந்தும் வீசும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

# ஆரிட்டைச் சொல்லி அழ?

**இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்**

## அக்கறையற்ற ஐயர்மார்

போன வசருசம்·எண்டு நினைக்கிறன். கொழும்பிலை வெள்ளவத்தையிலை ஒரு தமிழர். கனடாவிலை இருந்து வந்து இஞ்சை வந்து மேளுக்குக் கலியாணம் செய்து வைச்சவர். நல்ல குணமான பெட்டை, ஆனால் சாதுவான வெகுளித்தனம். பேசிச் செய்த கலியாணம். ஒரு எஞ்சினியர் மாப்பிள்ளை ஓம் எண்டிட்டான். கலியாண வீடு அந்தமாதிரி. பெட்டையை இதுக்கெண்டு செய்த பல்லக்கிலையும். பெடியை ஒரு குதிரையிலும் கொண்டு வந்து தாலிகட்டு நடந்தது. எந்த மதக் கலியாணம் இது? எந்த இனக்கலியாணம் இது எண்டு பலர் கேட்டவை. அப்பிடி ஒரு கலப்பான விசயங்கள் கனக்க. வந்த சனம் சத்தப்பொறுதி இல்லாமல் சாப்பிட்டிட்டுப் போனவை. ஏனெண்டால் அவை பெரும் காசுப் பார்ட்டி. ஏன் இதைச் சொல்லுறன் எண்டால், "காசிருந்தால் எல்லாத்தையும் வாங்கலாம்" எண்டது பலரின்ரை நினைப்பு.

இணையத்திலை ஒரு கோயில் கும்பாபிஷேகத்தைப் பாத்தனான். பாக்க அருவெறுப்பாக் கிடந்தது. எங்கடை ஐயர் மாரும் வெருளியளாப் போட்டினமோ? எண்டு எனக்குள்ளை நானே ஒரு கேள்வியைக் கேட்டன். பதில் சொல்லுறதுக்கு ஆருமில்லை. பாக்கப் போகேக்கை எல்லா ஊரிலையும் கோமாளியளும், வெருளியளும், பசாசுகளும் இன்னும் இருக்குதெண்டு விளங்கியது. நவீனமயமாக்கலிலை ஒண்டும் துலைஞ்சு போகேல்லை. வெளிநாடுகளிலை இருந்தும் வருகுதுகள். இல்லாட்டி வெளிநாட்டுக் காசு வாற உள்ளூர் வெருளியளும் கனக்க இருக்கு. இல்லாட்டி உள்ளூரிலை கள்ள வழியாலை உழைக்கிறதுகளுக்கும் கோயில், குளம் எண்டு பாராமல் தாங்களும் வெருளியாகி, மற்றாக்களையும் வெருளியாக்கிற பக்குவம் கனக்க இருக்கு.

புதுமையளைச் செய்யிறமாம். எண்டிட்டு கக்கூசுக்குப் பதிக்கிற மாபிள்களைக் கொண்டு வந்து கோயில் மூலஸ்தானத்துக்குள்ளை பதிக்கிற பழக்கம். அந்தக் காலத்திலை இந்தியாவிலை இருந்து கொண்டு வந்த சிற்பாச்சாரியரைக் கொண்டு செதுக்கின கருங்கல் தூணுகளுக்கெல்லாம் அந்த வடிவான சிற்ப வேலையாளை மறைச்சு வெள்ளி அங்கியளைப் பதிச்சுக் கோமாளி விளையாட்டு. மூலஸ்தானத்துக்குள்ளை தண்ணிப் பைப்பை வைச்சு பைப்பாலை சுவாமியைக் கழிவிப் பூசை நடத்தினம். கிணத்திலை இருந்து தண்ணி குடத்திலை எடுத்துக் குடமுழுக்குச் செய்யிறதுதான் வழமை. இப்ப பஞ்சிபிடிச்ச ஐயர்மார் படு சோம்பறி விளையாட்டு. கோயிலுகள் கோயில்கள் மாதிரி இல்லை. வெளிநாட்டிலை இருந்து காசைக் கொண்டு வந்து, விளக்கு மாறுக்குக் குஞ்சங்கட்டிக் கூட்டினவளாம் ஒரு காசுக்காறி, அது மாதிரி காசைக் கொட்டிச் சனம் கோயிலைக் கட்டி விளையாட ஆருக்கு உழைப்பு. ஐயருக்குத்தானே கொண்டாட்டம். எந்த ஐயரிட்டை வாகனம் இல்லை. எந்த ஐயரிட்டை கிலோ கணக்கிலை நகை இல்லை. கிழமைக்குக் கிழமை வாகனத்தை மாத்தினபடிதானே? திருவிழாச் செய்யிற சனம் ஓட்டைச் சைக்கிள்ளை திரியிதுகள்.

இப்ப சங்கானை சிங்கப்பூர் ஞானவைரவர் கோயிலிலை நடந்த மகா கும்பாபிஷே கத்திலை வீடியோக் காரன் ஆகாயத்திலை இருந்து படம் எடுக்கப் பாவிக்கிற சின்ன ஆளில்லாமல் ரிமோட்டாலை இயக்கிற பிளேனாலை தூபிக்கு மாலை போட்டுப் படமும் எடுத்து எல்லா இடத்திலையும் போட்டு இருக்கினம். உது விடியோக்காரன் கொஞ்சங் கூடக் காசை வேண்டிறதுக்குச் செய்த விளையாட்டுதத்தான் போலை இருக்கு. அந்த வெருளி செய்ததாலை இப்ப அதைப் பாத்திட்டுக் கன வெருளியள் துவங்கப்போகுதுகள். இனித் துவங்கப் போற வெருளியள் மாலையை கலியாணப் பொம்பிளை மாப்பிளையளுக்குப் போடும். அதைப் பாத்த இன்னுமொரு வெருளி அப்பிடி மாலையை செத்த சவத்துக்குப் போடும். இப்ப எங்கடை தமிழ் விழாக்களுக்கை கனக்க கோமாளித்தனம் புகுந்திருக்க, பிறமாதிரி உந்தப் பிளேனிலை மாலைபோடுற விளையாட்டும் ஒரு சம்பிரதாயமாகிவிடும். பிறகு உப்பிடியான விசியத்துக்கு ஐயர் குடுக்கிற சிட்டையிலும் மாலைபோடுறது ஒரு விழாவாப் போகும் எண்டதுதான் என்ரை சிந்தனை.

உதைப் பாத்த ஒரு ஆள் சொன்னார், கோயில் பேரிலையே 'சிங்கப்பூர் ஞானவைரவர் எண்டு தானே கிடக்கு. அதாலைதான் பிளேனாலை மாலை போட்டிருக்கினம் எண்டு. அறிவும் பொறுப்புமுள்ள ஐயர்மார் எண்டால் அவையளே



உப்பிடி ஏல்லாம் செய்யக்கூடாது எண்டு மறிச்சிருப்பினம். அவைக்கு இதுமாதிரியான விசியங்களிலை அக்கறை இல்லை. அவைக்கு விலாசம் தேவை. ஊரும், பண்பாடும் எக்கேடு கெட்டாலும் எப்பிடியோ தங்கடை வயிறு நிரம்பினால் போதுமெண்டதுதான் பல ஐயர் மாற்றை செயற்பாடு. இல்லாட்டில் சைவ சமயம் இருந்த இடத்திலை ஆஞ்ச நேயரும், வெங்கடா சலபதியும், ஐயப்பனும் எப்பிடி வந்து உள்ளிட்டது. சினிமாவிலை நகைச்சுவைக்குப் புது புது ஆக்களைக் கொண்டு வாறதும், புதுப் புது விசியங்களை புகுத்திறதும், படத்தை ஓடச்செய்யிறதுக்கான குறுக்குவழி. . இப்ப சமயமும் ஒரு படமாப் போச்சுது, எப்பிடியாவது ஓடினாச் சரி.

போற போக்கைப் பாத்தால் எங்கடை சமயத்தைப் பிறர் அழிக்கத்தேவை இல்லை. ஐயர் மாரும் உப்பிடியான விளையாட்டுக்காட்டிற கோமாளியளாலையும் செதியா அழிச்சும்போம்போலை கிடக்கு. ஒரு பக்கத்தாலை மதமாற்றம் மற்றப் பக்கத்தாலை கோயில் குளத்தை இடிக்கிறாங்கள். காசுக்காகப் புதுப்புது சாமியாரைக் கொண்டு வந்து கூத்தடிக்கினம். பாவம் சச்சியர். அவர் கிராமம் கிராமமாப் போய் சண்டை பிடிக்கிறார். சமயத்தைக் காப்பாற்றிறதுக்கு. அவராலை வெளி ஆக்களிட்டை இருந்துதான் சமயத்தைக் காப்பற்றலாம். ஆனால் கோடாரிக் காம்புகளை என்ன செய்யலாம்?

ஒரு ஐயர் இன்னுமொரு ஐயருக்குச் சொன்னதைக் கேட்டனான். இப்ப சனம் கன நேரம் மினைக் கெடாது. பட்டெண்டு வரும் சுருக்கமாகச் செய்துபோட்டுக் குடுக்கிறதைக் குடுத்தால் தாறதைத் தந்திட்டு வாங்கிக் கொண்டு போவினம். இப்ப உள்ள சனத்துக்கு முந்தின ஆக்கள் மாதிரி விளப்பமில்லை. - எண்டால் அதின்ரை மற்றக் கருத்துப் பேய்க் காட்டாலமெண்டதுதானே? இப்பிடியான சமூதாயச் சீரழிவை ஆரிட்டைச் சொல்லி அழ?

## சிற்பியாய் நீ

கண்களைமூடிக்
கனவுகள் துள்ளிய
கிள்ளைப் பருவத்தில்
என்னைக்
கடக்கவில்லை நீ

கடந்திருந்தால் ......
கண்களை
மூடிக்கொண்டே
காவுகொடுத்த எல்லா
நல்லவைக்குள்ளும்
நீயும் அடங்கியிருப்பாய்.

அறிவைத்திறந்து
அகிலத்தைப் பார்த்து
அருவருத்த
பொழுதுகளில்
அறிமுகமாகி
இருக்கவில்லை நீ

இருந்திருந்தால் .....
உக்கல் கூரையில்
ஒழுகிய மழையாய்
தலை தாங்கிய
கழிவெல்லாம்
கண்மூடிச் சகிக்கையில்
காட்சிப்படாமல்
கடந்திருப்பாய்.

வீழ்ந்தவை எல்லாம்
விதியே என்று
கண்ணீரில் கரைத்து
கசடுகள் கழுவி
இதயம் இறுக்கி
உறையத் தொடங்கிய
இறுதிப் பொழுதில் ,

தடுக்கி விழுந்த
குழந்தையின்
தளிர்நடையின்
தயக்கத்துடன்
நீ வந்தாய்

கரும்புவில் கதகதப்பில்
கண்களால் புன்னகைத்து
கடவுளின் பார்வையில்
இதயம் தொட்டு
இறுகிக் கிடந்த
பாறை துளைத்து
உன் பெயரை
என் உயிரில் .
சிதையிலும் சிதையாமல்
செதுக்கி வைத்தாய்.

- மாலினி



■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு

25

நன்றி தமிழ்லீடர் – அவுஸ்ரேலியா

உருமறைப்பிலை வாற ஆமியையும் எங்கடை ஆக்களையும் வித்தியாசம் தெரியுமே?"

"அப்பாடா.. தப்பினம்!" என்றான் செல்வம் சிரித்தவாறே!

"நீங்கள் தப்பினபடியால்தான் ஆமியாலை தப்ப முடியேல்லை", என்றுவிட்டு சிவமும் சிரித்தான்.

"அண்ணை.. நாங்கள் பிடிச்ச இடத்திலையிருந்து முற்றாகப் பின்வாங்கிட்டம். இதிலை ஏதும் திட்டம் இருக்குமெண்டு நினைக்கிறன்", என்றான் செல்வம்.

"ஓமோம்.. இருக்கும்", எனச் சிவமும் ஆமோதித்தான்.

போராளிகள் களத்தை விட்டு நீங்கிச் சிறிது நேரத்திலேயே கிபிர் விமானங்கள் அந்த இடத்தை இலக்குவைத்து குண்டுகளை வீசத் தொடங்கிவிட்டன. கண்காணிப்புக்கு நிறுத்தப்பட்டிருந்த சிறு தொகையினரான போராளிகளும் இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்ட பாதுகாப்பான காவலரண்களில் பதுங்கிவிட்டதால் அவர்களில் எவருக்கும் எதுவித பாதிப்புக்களும் ஏற்படவில்லை. ஏறக்குறைய ஒரு மணிநேரம் நான்கு விமானங்கள் மாறி மாறித் தாக்குதல் நடத்திவிட்டுப் போய்விட்டன. அடுத்த சில நிமிடங்களில் தொடங்கிய எறிகணை வீச்சு மாலையில் நன்றாக இருட்டும் வரை தொடர்ந்தது. பல எறிகணைகள் காடுகளுக்குள்ளும் விழுந்து வெடித்தன. அன்று இரவு சிறப்புத் தளபதி முக்கிய அணிகளின் பொறுப்பாளர்களை அழைத்து ஒரு விசேட கூட்டம் நடத்தினார்.

அன்று இரவுக்குள் தற்சமயம் முன்னரங்காக உள்ள பெரியதம்பனைப் பகுதியிலிருந்து பண்டிவிரிச்சான் வரை மறைவான பகுதிகளால் பாம்பு பங்கர்கள் அமைக்கப்படவேண்டும் எனவும், படையினர் நகர்வை மேற்கொள்ளக்கூடிய பகுதிகள் எங்கும் ரிமோட்டில் இயங்கக்கூடியவை உட்பட சகலவிதமான கண்ணிவெடிகளும் புதைக்கப்பட வேண்டுமெனவும், அக் கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டது. நூற்றுக்கும் மேற் பட்ட இராணுவத்தினர் கொல் லப்பட்டு விட்டதாகவும், ஏராளமானோர் படுகாயமடைந்து விட்டதாகவும் வேவுத் தகவல்கள் தெரிவிப்பதாகவும், படையினர் தம்மை மீளமைத்து உடனடியாக அடுத்த நகர்வை மேற்கொள்வது சாத்தியமில்லையெனவும் அவர் தெரிவித்தார். அந்த இடைவெளியைப் பயன்படுத்தி சகல தயாரிப்புக்களையும் நிறைவு செய்வது பற்றியும் அவர் திட்டங்களை விளக்கினார்.



போராளிகள் தரப்பிலும் நான்கு பேர் வீரச்சாவடைந்திருந்தனர். பன்னிரண்டு பேர் காயமடைந் திருந்தனர். போராளிகள் தங்கள் தோழர்களின் இழப்புக்காகக் கவலைப்பட்டாலும், அந்தக் கவலையை எதிரியின் மீதான கோபமாக மாற்ற அவர்கள் கற்றுக்கொண்டிருந்தனர்.

இரு நாட்களாகச் சண்டைகளில் தோய்ந்து போயிருந்த சிவத்தின் மனம் இப்போ கணேசனை நினைத்துக்கொண்டது. ரூபாவை கணேஸ் அனுப்பிவிட்ட விடயம் சிவத்துக்கு தெரியாதாகையால் ரூபா அவனைக் கவனிப்பாள் என அவன் தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டான். எப்பிடியும் மறு நாள் காலை கணேசை போய்ப் பார்க்க வேண்டும் என சிவம் முடிவு செய்து கொண்டான்.

அடுத்தநாள் காலையில் சிவம் பண்டிவிரிச்சான் மருத்துவப் பிரிவுக்குப் போனபோது -அவனுக்கு அங்கே அதிர்ச்சிதான் காத்திருந்தது. கணேஸ் படுத்திருந்த கட்டில் வெறுமனே கிடந்தது. அருகில் படுத்திருந்த போராளியிடம், "தம்பி.. இதில படுத்திருந்த அண்ணை எங்கை?", எனக் கேட்டான்.

"தெரியேல்லை அண்ணை... நான் ராத்திரித்தான் வந்தனான்" - என்றான் அவன்.

கணேஸ் அனுமதிக்கப்பட்ட போது இருந்த போராளிகள் எவருமே காணப்படவில்லை. சிவம் மனம் குழம்பியவனாகப் பொறுப்பாளரைத் தேடிப் போனான்.

பொறுப்பாளர் சிவத்தைக் கண்டதும், "வாங்கோ.. அண்ணை", எனக் கூறியவாறு எழுந்து நின்றான்.

சிவம் கணேஸ் பற்றி அவனிடம் விசாரித்தான்.

அவன் கடுமையான காயங்களுக்கு உட்பட்ட போராளிகளைப் பராமரிக்கும் இலுப்பைக்கடவை மருத்துவ முகாமுக்கு மாற்றப்பட்டு விட்டதாகவும், தாங்கள் உடனடிக் காயங்களுக்கு வைத்தியம் செய்வதுடன், முதலுதவிப் பிரிவாக இயங்குவதாகவும் தெரிவித்தான். அவனுக்கு கணேசைப் பற்றி எந்தவித விவரமும் தெரிந்திருக்கவில்லை.

ரூபாவைச் சந்தித்தால் விவரம் அறிய முடியும் என நினைத்தவனாக அரசியல் துறையின் மகளிர் பிரிவை நோக்கிப் போனான். அங்கு ரூபா தனது படையணிக்கே திரும்பிவிட்டதாக தெரிவித்தனர். அவர்களாலும் கணேஸ் பற்றிய எந்த விவரங்களையும் சிவத்துக்கு கொடுக்க முடியவில்லை.

அப்போது அங்கு வந்த முகாம் பொறுப்பாளர், கணேஸ் தான் சண்டைக்குப் போகப் போவதாகக் கூறி கட்டிலில் இருந்து எழுந்து விழுந்துவிட்டதாக ரூபா தன்னிடம் கூறியதாகக் கூறினாள். அதற்கு மேல் எதையும் அவளும் தெரிந்து வைத்திருக்கவில்லை. படுகாயமுற்று, இடுப்பின் கீழ் இயக்கமின்றி செயலற்ற நிலைமையில் இருந்த போதும் சண்டை என்றதும் தன்னிலை மறந்து உணர்ச்சி வசப்பட்டதை நினைத்த போது சிவத்தின் உடல் ஒருமுறை புல்லரித்தது. ஆனால் கணேசின் நிலைபற்றி அறிய முடியாமல் இருந்தமை அவனுள் பெரும் குழப்பத்தையே ஏற்படுத்தியது. சண்டைக்களம் சூடு பிடித்துள்ள நிலையில் இலுப்பைக்கடவை போய் வருவதும் சாத்தியமில்லை. எதற்கும் முதலில் முகாமில் போய் வோக்கி மூலம் தொடர்பு எடுப்பதாக முடிவு செய்தவனாக சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான் சிவம்.

அவன் திரும்பி வந்துகொண்டிருந்த போது மடுவில் கந்தசாமியும் இன்னொரு பெண்ணும் தண்ணீர் குடங்களுடன் வந்து கொண்டிருந்தனர். சிவம் சைக்கிளை நிறுத்தினான்.

கந்தசாமி தனக்கருகில் நின்ற பெண்ணிடம், "இவர் தான் என்ரை உயிரைக் காப்பாற்றின இயக்கத் தம்பி", என அறிமுகப்படுத்தினான்.

கந்தசாமி ஒரு மெல்லிய சிரிப்புடன், "இதுதான் என்ரை பெண்சாதி புஷ்பம்... அங்காலை சண்டை நடக்கேக்கயே முருகரப்பு போய் இவவையும் பிள்ளையளையும் காட்டுப்பாதையாலை கூட்டி வந்திட்டார்", என்றான்.

அவள், "அங்கை எங்களைத் தேடி வந்தவங்களாம்.. நாங்கள் இல்லையெண்டாப் போல வீட்டைக் கொளுத்திப் போட்டு போட்டாங்களாம்.. எங்களை இயக்கம் முதலே கூட்டிக்கொண்டு போய்க் குருக்களூரிலை ஒரு மறைவான இடத்தில விட்டவை. அங்கை வந்துதான் முருகரப்பு கூட்டி வந்தவர்", என நடந்ததைக் கூறி முடித்தாள் புஷ்ப்ம். அவள் குரலில் எல்லையற்ற நன்றிப் பெருக்கு இளையோடியது.

"தம்பி.. இந்த நன்றியை நான் சாகுமட்டும் மறக்கமாட்டன்", என்று கூறிய கந்தசாமியின் குரல் தளதளத்தது.

புஷ்பம் திடீரென, "நீங்கள் சங்கரசிவமெல்லே?" எனக் கேட்டாள்.

சிவம் வியப்புடன். "ஓ.. ஏன் என்னை முதலே தெரியுமே?" எனக் கேட்டான்.

"பண்டிவிரிச்சான் பள்ளிக்கூடத்திலை ஓ.எல்லிலை உங்களோட படிச்ச புஷ்பமலரை ஞாபகமில்லையே?"

(நெருப்பாற்றில் நீந்துவோம்...)

# பேனாவும் ஆயுதமும் ஏந்திய போராளி நித்தி!

■ சுடரவன்


பேனாமுனையும், துப்பாக்கி முனையும் சக்தி வாய்ந்தவை. இவை இரண்டும் நல்லவர் கையில் இருந்தால் அந்தந்தத் துறையில் அவர்களை வல்லவர்களாக்கும், அத்துடன் மனித சமுதாயத்துக்கு வழி காட்டும் பயன் விளைவிக்கும். இதில் எதாவது தவறானவர்கள் கையில் போனால் இனத்துக்கே அழிவுண்டாகும். இரண்டுமே கண்ணியத்துடன் பயன்படுத்தப்பட வேண்டியவை. இரண்டுமே சரியாகப் பயன்படுத்தியவர்கள் விரல் விட்டு எண்ணத் தக்கவர்கள். அத்தகையவர்களில் ஒருவரே நித்தி.

மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரது இயற்பெயர் இராசையா நித்தியானந்தன். மட்டக்களப்பைப் பொறுத்தவரை அமைப்பு ரீதியாக ஆரம்பத்தில் இருந்து செயற்பட்டவர்களில் பிற்காலத்தில் மாமனிதராகப் போற்றப்பட்ட ஜோசப் பாரராஜசிங்கம் (தினபதி சிந்தாமணி ) தலைமையில் 1981 இல் செயற்பட்டவர்களில் இரா. நித்தியானந்தன் முக்கியமானவர். இவர் வீரகேசரியின் மட்டக்களப்பு நிருபர். இவருடன் இதே நிறுவனத்தின் சார்பில் இரா. இரத்தினசிங்கம் (வவுணதீவு) - பின்னர் முற்றுகை ஒன்றில் மாவீரரானவர்)

இரா. உதயகுமார் (வவுண தீவு ), கோவிந்தசாமி (செங்கலடி), திருநாவுக்கரசு (பட்டிருப்பு), இரத்தினலிங்கம் (திருமலை), எஸ். பாக்கியராஜா (மண்டூர்), எஸ்.கே.குமரகுரு (கொக்கட்டிச் சோலை)ஆகியோரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் என்.நாகராஜாவும், லேக் ஹவுஸ் நிறுவனத்தின் சார்பில் இரா.துரைரத்தினமும் இந்த கிழக்கிலங்கை பத்திரிகையாளர் சங்கத்தில் அங்கம் வகித்தனர் (மேலும் அம்பாறை மாவட்டத்தில் இருந்தும் சிலர் கலந்து கொண்டனர்) ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நிறுவனத்தின் சார்பில் செயலாற்றினர். வீரகேசரி எப்பொழுதும் நடுநிலையான செய்திகளையே கொடுப்பது. லேக். ஹவுஸ் போன்று அரசின் தீர்மானங்களுக்கேற்ற வகையில் அது செய்திகளை வழங்குவதில்லை.

ஒரு செய்தியாளர் என்ற வகையில் எல்லா இயக்கத்தினரதும் செய்திகளையும் அனுப்புவார் நித்தி. அவரது அனுபவத்தில் நம்பகரமான இயக்கமாக விடுதலைப் புலிகள் தெரிந்தனர். மட்-அம்பாறைத் தலைமையுடனும் குறிப்பாக அரசியல்துறைக்குப் பொறுப்பாக இருந்த பிரான்சிஸூடனும் (இராசையா சடாட்சரபவான் - கல்லாறு ) சுயநலமில்லாத நித்திக்கு நட்பு ஏற்பட்டதில் வியப்பில்லை.

மட்டக்களப்பில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களையும், மக்களுக்கு எதிரான அனைத்து ஒடுக்குமுறைகளையும் வெளி உலகிற்குத் தெரியும் வகையில் கொண்டு வந்ததன் மூலம் துணிந்து செயற்பட்ட பத்திரிகையாளனாக



26ஆம் ஆண்டு நினைவு
(26.04.2018)

இனங்காணப்பட்டார். தொழிலாக மாத்திரம் கருதாமல் மக்களின் நலனில் அக்கறைகொண்டு செயற்பட்ட பத்திரிகையாளர்களில் நித்தியும் ஒருவராவார் . சிங்கள அரசுக்கெதிராக போராடிக் கொண்டிருந்த எம்மக்கள் அயல் நாடான இந்தியாவின் படைகளுக்கெதிராக போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். தமிழ் மக்களின் விடுதலை இயக்கமாக விடுதலைப் புலிகள் களத்தில் நின்ற வேளையில் இந்தியப் படையினரின் ஆக்கிரமிப்பு அவர்களுக்கெதிராக போராடும் நிலைக்கு தள்ளியது.

எமக்கு விடுதலை வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியும். ஆனால் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு போராட முற்படுபவர்தான் தலைவராகின்றார். அர்ப்பணிப்புகளுக்கு மத்தியில் உருவாகும் தலைவர்தான் அவ்வினத்தினால் தேசியத் தலைவராக ஏற்றுக்கொள்ளப்படுகின்றார். இந்தியப் படையினரின் வருகையோடு மாறுபட்ட கொள்கையோடு இயங்கியவர்களும் ஆயுதக் குழுக்களாக எமது மண்ணில் கால்பதித்தனர். இந்திய - இலங்கை அரசுகளின் கூட்டுச்சதிக்கு உடந்தையாக செயற்படுத்துவதற்கும், விடுதலைப் போராட்டத்தைச் சிதைப்பதற்கும் இவர்களைப் போன்றவர்களைப் பயன்படுத்த இரண்டு அரசுகளும் தொடங்கின.

இதனால் எமதுமண்ணில்,தமிழ் மக்களின் தேசிய விடுதலை இயக்கத்திற்கு ஆதரவாகச் செயற்பட்ட அறிவாற்றல் மிக்கவர்களை அழிக்க ஆரம்பித்தனர். இவ்வரிசையில் மட்டக்களப்பில் மக்கள் குழுத் தல்லவராக செயற்பட்ட வண. பிதா சந்திரா பெர்னாண்டோ, தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் டி.எஸ். கே வணசிங்க, அதிபர் கணபதிப்பிள்ளை (ஆரையம்பதி), ஆசிரியர் கனகரெத்தினம் (ஆரையம்பதி), கிராம சேவையாளர் தேவிசுதன் (கொம்மாதுறை) போன்றோர் இந்தியப் படையினரின் ஆதரவில் அவர்களின் அரவணைப்பில் இயங்கிய ஆயுதக் குழுக்களாக செயற்பட்டவர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். மேற்றப்பட்டவர்களின் அளப்பரிய சேவையை மட்டக்களப்புத் தமிழ் மக்கள் இழந்து தவித்தனர்.

இவ்வரிசையில் மட்டக்களப்பு மாவட்ட வீரகேசரி பத்திரிகையின் நிருபரான நித்திக்கெதிராகவும் படுகொலை முயற்சியொன்று மட்டக்களப்பு பயணியர் வீதியில் அரங்கேறியது. இவரின் தேசப்பற்று, மக்களுக்கான சமூகப்பணி ஆகியவற்றோடு இணைந்த பத்திரிகைத்துறைச் செயற்பாடு இந்தியப் படையினருக்கும் அவர்களோடு இணைந்திருந்த ஆயுதக் குழுக்களுக்கும் பெரும் சவாலாக இருந்தது. இதனால் இவரைப் படுகொலை செய்வதற்கு முயற்சி எடுத்தனர் புளொட் குழுவினர்.

1988 .08 .15 நாள் அன்று இவர் மிதிவண்டியில் பயணியர் வீதியால் சென்று கொண்டிருந்தபோது அவரை வழிமறித்த இந்த ஆயுதக் குழுவினர் அவரைத் தாக்கி அவரின் ஆணுறுப்பில் அசிட் திரவத்தை ஊற்றி, குரல்வளையை அறுத்தனர். இவர் சாவடைந்து விட்டார் எனக் கருதி வீதியில் விட்டுச் சென்றனர். அவ்வழியே வந்த பாதசாரிகளின் அவதானித்த போது இவருக்கு உயிர் இருப்பது அசைவின் மூலம் தெரிய வந்தது உடனே மட்டக்களப்பு பொது மருத்துவமனையில் சேர்த்தனர். ஆனால் இவரது பத்திரிகைத்துறை நண்பர்களுக்கு சம்பவம் தெரிய வந்தவுடன் மருத்துவமனையில் வைத்து சிகிச்சை அளிப்பது மேலும் ஆபத்தை உண்டு பண்ணும் என உணர்ந்தனர். தமது செல்வாக்கைப் பயன்படுத்தி கொழும்பு மருத்துவமன்னைக்கு மாற்றியதனால் இவர் உயிர் பிழைத்தார்.

எந்த ஆயுதக்குழுவும் தலைமையைப் பொறுத்தே தமது செயற்பாட்டை அமைக்கும் உமா மகேஸ்வரன் சுழிபுரத்தில் தங்கியிருந்தவேளை அவரது பாதுகாப்புக்கென நின்ற புளொட்டினரது கண்ணில் புலிகளின் சுவரொட்டிகளை ஒட்டச் சென்ற ஆறு மாணவர்கள் தென்பட்டனர். உமாகேஸ்வரன் மீதான விசுவாசத்தால் அந்த மாணவர்களும் அவரது பாதுகாப்புக்கு ஊறு விளை விக்கக் கூடியவர்கள் எனக் கருதி கொல்லப்பட்டனர். அத்துடன் அவர்களது ஆணுறுப்புக்கள் வெட்டப்பட்டு சடலங்களின் வாயில் திணிக்கப்பட்டன. இந்தப் பாதகச் செயலைப் புரிந்தமைக்காக கொலையாளிகள் அதன் தலைமையால் தண்டிக்கப்படவில்லை. (சிலவேளை பாதுகாக்கப்பட்டிருக்கக்கூடும்) தண்டிக்கப்பட்டிருந்தால் நித்தியின் ஆணுறுப்பில் அசிட் ஊற்றியிருக்கமாட்டார்கள். கருணாவின் பிரிவுக்குப்பின் திடீர்த் தேசியவாதிகளான ஊடகவியலாளர்கள் சிலர் கரும்புலிகளும் ஆணுறுப்பில் அசிட் வீசியவர்களும் சமமானவர்களே என வாதிட முனைகின்றனர்.

நித்தியை மட்டுமல்ல அன்னை பூபதியின் உண்ணாவிரத நிகழ்வைத் தொடர்ந்து சட்டத்தரணி பொன். வேணுதாஸையும் நஞ்சு ஊசி போட்டு கொல்ல முயன்றனர் புளொட்டினர். இந்தியப் படையின் மோசமான தாக்குதலால் மட்டு. வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார் பொன். வேணுதாஸ்.

(18ஆம் பக்கம் பார்க்க)

பின்பற்றப்பட வேண்டிய முன்னுதாரணம் 10

# அதிகாரியும் தவ வாழ்வும்



துஷ்பிரயோகம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாவிட்டாலும் தினமும் அது பற்றிக் கேள்விபட்டுக் கொண்டிருக்கிறோம். அது பற்றிப் பல உரையாடல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவற்றில் மக்களுக்குச் சேவை வழங்கவென நியமிக்கப்படுகின்ற அதிகாரிகள் குறைந்த கால அவகாசத்தில் கூடிய மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற நல்நோக்கோடு அவர்களுக்குப் பல சிறப்புச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. அப்படிப்பட்ட சலுகைகளை நேர்த்தியாகப் பயன்படுத்தும் அதிகாரிகளைவிட துஷ்பிரயோகம் செய்பவர்களே அதிகம் எனலாம்.

உதாரணத்திற்கு வாகனங்களை தமது சொந்த நலன்களுக்காகப் பயன்படுத்தும் அதிகாரிகளை நான் கண்ணு டாகக் கண்டிருக்கிறேன். அவர்களது வீட்டுத் தேவைகளுக்காக வாகனத்தை அதிகம் பயன்படுத்துவர். எனக்கு நன்கு தெரிந்த அதிகாரி ஒருவர் இருக்கிறார். அவர் காரியாலயத்துக்குப் போவதற்காக வா்கன வசதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் எட்டரை மணிக்குப் போகத் தேவையான வாகனத்தைக் காலையிலே ஏழு மணிக்கெல்லாம் வரவழைத்து விடுவார். வந்ததும் அவர் வீட்டிற்கு முன்னால் வைத்து சாரதி வண்டியைக் கழுவுவார். பின்னர் அவரது வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி வர வாகனத்தையும், சாரதி யையும் பயன்படுத்துவர். பின்னர் வீட்டு வேலைகள் சாரதிக்கு வழங்கப்பட்டு சன்மானமாகக் காலை உணவும், தேநீரும் அவருக்கு வழங்கப்படும். அதை மீறி அவரொன்றும் பேசமுடியாது. ஏனென்றால் அவர் அந்த அதிகாரியின் நற்சான்றிதழுக்காகக் காத்திருப்பவர். வேலை தொடர்பான விவகாரங்களில் அவருக்கு அதிகாரியின் அனுசரணை தேவை.

அதைப் பயன்படுத்தி அந்தச் சாரதியும் தான்தோன்றித்தனமாக நடந்து கொள்வார். மாலை அதிகாரியை வீட்டில் இறக்கிவிட்டு முதலில் அந்த வாகனத்திலுள்ள திணைக்களத்தின் பெயரை மடித்து வைத்துவிடுவார். பின்னர் தெருவோரங்களில் காணப்படும் வீட்டுக்குத் தேவையான பொருட்களுடன், விறகுகளைக்கூட விட்டு வைக்காமல் ஏற்றிச் செல்வதைப் பார்த்திருக்கிறேன். எனவே இப்படியான துஷ்பிரயோகங்கள் அதிகம் நடைபெறும் எமது நாட்டில் அண்மையில் நான் சந்தித்த ஒருவர் எனது எண்ணத்தையும், அபிப்பிராயங்களையும் அடியோடு மாற்றி விட்டார். அவர் பெயரை நான் குறிப்பிட விரும்பவில்லை. அவர் விளம்பரங்களை விரும்பாத மனிதர். அத்துடன் அவர் பெயரைப் பார்ப்பவர்கள் அவரை வாழத்தெரியாதவர் என்று மட்டுப்படுத்தி அவர் பெருந் தன்மையை மழுங்கடிக்கக்கூடும்.

அவர் ஓர் உயர் அதிகாரி. அவருக்காக ஒரு சொகுசு வாகனமும், முழுநேர சாரதியும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் காரியாலயத் தேவைக்காக மட்டுமே அந்த வாகனத்தையும் சாரதியையும் பயன்படுத்துகிறார். அதை அவர் மனைவியும் பின்பற்றுகிறார். அவரின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு முற்றிலும் உறுதுணையாக இருப்பவர் அவரின் மனைவி. வீட்டுத் தேவை எதுவானாலும் சரி அவர்கள் வாடகைக்கு அமர்த்திய வண்டியிலே (பெரும்பாலும் முச்சக்கர வண்டி) போய் வருகின்றனர்.



பிறந்ததினக் கொண்டாட்டம் ஒன்றில்தான் அவர் எனக்கு அறிமுகமானார். பேச்சிலே ஒருமைப்பாடு கண்டபோதே அவர் மனந்திறந்து பேசினார். எத்தனையோ பேர்கள் ஏதேதோ எல்லாம் செய்கின்றனர் நீங்கள் மட்டும் ஏன் இப்படி? என்று கேட்டபோது. எனது ஆன்மா கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும் திருப்திகரமான பதிலை கொடுக்க ஒவ்வொருவரும் ஆயத்தமாக இருக்க வேண்டும். அந்த வகையில் பிறர் எனக்கு எவ்வளவு உண்மையாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேனோ? அதேபோல நானும் உண்மையாக இருக்க வேண்டாமா?


எனக்காகத் தரப்பட்ட வாகனம். எனக்காக வேலைக்கு அமர்த்தப்பட்ட சாரதி. இதற்கு வாகனக் குறிப்பேட்டை பேண வேண்டிய அவசியம் எனக்கில்லை. இருந்தும் ஒரு பொறுப்பானவர் என்ற நம்பிக்கையில் எனக்குத் தரப்பட்ட வாகனத்தை நான் பொறுப்புடன் உபயோகப்படுத்தாவிட்டால் அதற்கான அர்த்தமே வேறு. அத்துடன் சாரதியை எனக்கு அடிமையாக்கிவிட்டால் மறுபுறம் நானும் ஒருவகையில் அவனுக்கு அடிமையாக வேண்டிய தேவை உண்டு. அதை மறுப்பதற்கில்லை. ஆழச் சிந்தித்தோமானால் இதன் உள் அர்த்தம் புரியும்.

உண்மை, நேர்மை, விசுவாசம், கடமை உணர்வு, சத்தியம் என்பன எழுத்துகளிலும்விட இயல்பில் வரவேண்டும் என்பதையே நான் விரும்புகிறேன். அதனால் இயல்பாக வருவதற்கு இது கூட ஒரு பயிற்சியாக இருக்கலாம் அல்லவா? எனவே பயிற்சி செய்கிறேன் என்று சொன்னார் அந்த அதிகாரி.

உலகத்தில் அயோக்கியனாக இருப்பது சுலபம். நேர்மையானவனாக இருப்பது ஒரு தவத்தை ஒத்தது. அதி உச்ச மதிஞானம் உண்டென்றாலே தவம் சாத்தியமாகும். எனவே மேற் குறிப்பிட்ட அதிகாரியும், குடும்பத்தினரும் பின்பற்றப்பட வேண்டிய முன்னுதாரணமானவர்கள். அவர்கள் வாழ்வது தவ வாழ்க்கை. பின்பற்றினால் மேன்மை உண்டு.

செல்வராகவன் இயக்கத்தில்
சூர்யா அடுத்து கே.வி.ஆனந்தின்
நடிக்கவுள்ளார்.
றுவனம் தயாரிக்கவுள்ள இந்தப்
ழுத்தாளர் பட்டுக்கோட்டை
சையமைப்பாளர் ஹரிஸ்
கியோருடன் தான்
ள்ளார் என ஆனந்த்
ர்வமாக அறிவித்துள்ளார்.
இயக்கத்தில் சூர்யா அயன்,
கிய படங்களில் நடித்துள்ளார்
றிப்பிடத்தக்கது.






மம்முட்டியின் மகன் துல்கர் சல்மான் கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால் படம் மூலம் மீண்டும் தமிழுக்கு வருகிறார். இந்தப் படம் வெளியீட்டுக்கு தயாராகவுள்ளது.

இதையடுத்து அவர் த்ரில்லர் படம் ஒன்றில் நடிக்கவுள்ளார். இதில் அவருக்கு ஜோடியாக 4 நாயகிகள் நடிக்கவுள்ளனர். நிவேதா பெத்துராஜ், ஷாலினி பாண்டே ஆகியோர் ஒப்பந்தமாகியுள்ளனர். மற்ற இரு நாயகிகளுக்குமான தேர்வு நடைபெறுகிறது.








ரஜினியின் காலா படம் ஜூன் 7 ஆம் திகதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தால் புதிய படங்கள் வெளியாவது அனைத்தும் நிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது போராட்டம் முடிவடைந்ததால் படங்கள் தொடர்ந்து வெளியாகவுள்ளன. இதனாலேயே காலா வெளியீடும் தள்ளிப் போயுள்ளது.

மேயாத மான் படத்தில் நடித்தவர் பிரியா பவானி சங்கர். இப்போது கார்த்தி ஜோடியாக கடைக்குட்டி சிங்கம் படத்தில் நடிக்கிறார்.

அவர் எஸ்.ஜே.சூர்யாவுக்கு ஜோடியாக ஒரு படத்தில் நடிக்கவுள்ளார். காதல் கதை கொண்ட இந்தப் படத்தை நெல்சன் வெங்கடேசன் இயக்கவுள்ளார்.




# தவறான தீர்ப்பு

ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கும் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்கும் இடையில் கடந்த 17 ஆம் திகதி மும்பையில் நடைபெற்ற போட்டியில் உமேஸ் யாதவிற்கு வழங்கப்பட்ட ஆட்டமிழப்பு மீண்டும் மூன்றாவது நடுவர்களின் தொழில்நுட்ப அறிவைக் கேலிக்குள்ளாக்கியது.

இந்தப் போட்டியில் பும்ராவின் பந்துவீச்சில் ரோகித் சர்மாவிடம் பிடி கொடுத்து உமேஸ் யாதவ் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். அது நோபோலா, இல்லையா என்பதை உறுதிப்படுத்த மைதான நடுவர்கள் தமது முடிவை மூன்றாவது நடுவரிடம் பரிசீலனைக்காக விடுத்திருந்தனர்.

அப்போது றீப்ளேயில் மூன்றாவது நடுவர் பும்ராவின் காலைக் கவனித்தாரே தவிர பந்துவீசிய பக்கத்திலேயே உமேஸ் யாதவ் இருந்ததைக் கவனிக்கவில்லை. ஏனென்றால் அவர் துடுப்பெடுத்தாடிய பொழுது எதிர்முனையில் அல்லவா இருந்திருக்க வேண்டும். பின்னர் தான் தெரிய வந்தது உமேஸ் யாதவை ஆட்டமிழக்கச் செய்த பந்துவீச்சுக்குப் பதிலாக பும்ரா வீசிய வேறொரு பந்துவீச்சைப் பரிசீலனை செய்த விடயம்.


இது போன்றதொரு சம்பவம் முன்னதாக 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில் சச்சின் டெண்டுல்கருக்கு ஏற்பட்டிருந்தது. அமித் மிஸ்ரா வீசிய பந்து வீச்சில் அவர் ஆட்டமிழந்த போது மிஸ்ரா வீசிய வேறொரு பந்துவீச்சை மூன்றாவது நடுவர் பரிசீலனை செய்து தவறான தீர்ப்பை வழங்கி இருந்தார்.

இவ்வாறான தவறுகள் ஏற்படுவதற்கான காரணம் குறிப்பிட்ட பந்துவீச்சு றீப்ளேயை ஒரு தரம் கிளிக் பண்ணுவதற்குப் பதிலாக இரண்டு தடவைகள் கிளிக் பண்ணும் போது அது இறுதியாக வீசப்பட்ட பந்திற்குப் பதிலாக அதற்கு முதல் வீசிய பந்துவீச்சை வெளிப்படுத்துவதே ஆகும். மும்பையில் நடைபெற்ற இந்தப் போட்டிக்கு இந்தியாவைச் சேர்ந்த கே.என்.அனந்தபத்மநாதன் மூன்றாவது நடுவராகப் பணிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது.

# நட்டக் கணக்கு


ஐ.பி.எல். போட்டிகளில் அணிகளின் உரிமையாளர்கள் நட்டமடைகின்றனர் என்று சொன்னால் யாராவது நம்பு வார்களா? ஆனாலும் இம்முறை ஐ.பி. எல். போட்டிகளால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் டெல்லி டேர்டெவில்ஸ் அணியும் நட்டத்தைச் சந்தித்துள்ளன. சென்னையில் போட்டிகளை நடத்த முடியாத காரணத்தால் அந்தப் போட்டிகள் புனே மைதானத்திற்கு மாற்றப்பட்டன.

இதனால் உத்தேசமாக 3 கோடிக்கு மேல் சென்னை அணி நட்டத்தைச் சந்திக்கும் எனக் கருதப்படுகின்றது. ஆனாலும் சென்னைக்குப் பதிலாக உடனடியாக ஒரு மாற்று மைதானமே தேவைப்பட்டதால் பணஇழப்பு அவர்களுக்கு இரண்டாம் பட்சமாகவே தோன்றியது. அதுபோலவே டெல்லி பெரோஷா கோட்லா மைதானத்தில் கிளப்ஹவுஸ் பார்வையாளர் பகுதி அதிக வருமானம் தரும் இடமாக இருந்தது. ஆனாலும் அப்பகுதி அபாயகரமானதாக இருப்பதால் அங்கிருந்து போட்டிகளைப் பார்வையிட அனுமதிக்கக்கூடாது எனக்கூறி வழக்கொன்று நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றது. ஏறத்தாழ 2300 பேர் வரை இருந்து போட்டியைக் கண்டு களிக்கக் கூடிய அந்தப் பகுதி தடை செய்யப்பட்டதால் ஒரு போட்டியின் போதே ஒரு கோடி ரூபா வரை இழப்பு ஏற்படுகின்றது. எனவே சொந்த மைதானத்தில் நடைபெறும் 7 போட்டிகளால் 7 கோடிகள் வரை டெல்லி அணி இழக்க வேண்டிவரும் எனவும் கருதப்படுகின்றது. இந்தப் போட்டிகளை வேறு மைதானத்திற்கு மாற்றினாலும் நட்டமே ஏற்படும் என்பதால் அந்த முயற்சியில் அணி நிர்வாகம் இறங்கவில்லை.



# பதவி நீக்கம்

இந்த வருடம் ரஷ்யாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளுக்கு இன்னமும் ஒன்றரை மாதத்திற்கும் குறைவான காலமே இருக்கின்றது. இந்நிலையில் ஜப்பான் அணியின் முகாமையாளர் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார். பொஸ்னியாவைச் சேர்ந்த முன்னாள் உதைபந்தாட்ட வீரரான வாஹித் ஹாலில்ஹோடிச் 2015 ஆம் ஆண்டு ஜப்பான் உதைபந்தாட்ட அணியின் முகாமையாளராக நியமிக்கப்பட்டிருந்தார். அவரின் பயிற்சியின் கீழேயே ஜப்பான் அணி உலகக் கிண்ணத்திற்குத் தகுதி பெற்றிருந்தது.



தற்போது உலகக் கிண்ணப் போட்டிகளுக்குத் தகுதியான நாடுகள் சிநேகபூர்வப் போட்டிகளில் விளையாடி வருகின்றன. அந்தவகையில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஜப்பான் விளையாடிய மாலி அணியுடனான போட்டி சமநிலையில் முடிந்ததோடு உக்ரைனுடனான போட்டியில் தோல்வியும் அடைந்திருந்தது. இதையடுத்தே அவர் முகாமையாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

சிநேகபூர்வ ஆட்டத்திலேயே வெற்றி பெற முடியவில்லை என்றால் பலம்மிக்க அணிகள் பங்குகொள்ளும் உலகக் கிண்ணத்தை எவ்வாறு ஜப்பான் சமாளிக்கப்போகின்றது என்ற கேள்வி அவரது பதவி நீக்கத்தை நியாயப்படுத்துகின்றது. ஆனாலும் உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக தூரநோக்கில் சிந்தித்து செயற்படும் நாடுகளுக்கு மத்தியில் இன்னமும் குறுகிய காலமே உள்ள நிலையில் இந்த நடவடிக்கை விமர்சனத்திற்கும் ஆளாகியுள்ளது.

புதிய முகாமையாளராக ஜப்பான் உதைபந்தாட்டச் சங்கத் தொழில் நுட்பக்குழுவின் பணிப்பாளராக விளங்கிய அகிரா நிஷினோ நியமிக்கப்பட்டுள்ளார். ஜப்பான் தேசிய அணிக்காக 12 போட்டிகளில் விளையாடிய அகிரா நிஷினோ முன்னர் முகாமையாளராகவும் விளங்கியவர். இவரது பயிற்சியின் கீழேயே 1996 ஆம் ஆண்டு அட்லாண்டாவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் ஜப்பான் – பிரேஸிலைத் தோற்கடித்திருந்தது. எனவே அவரது திறமை குறித்து எந்தச் சந்தேகமும் இல்லை என்றாலும் குறுகிய காலத்தினுள் அணியைத் தயார்ப்படுத்துவது இலகுவான காரியமாக இருக்கப்போவதில்லை.




# யாருக்கு விருது?

சர்வதேச உதைபந்தாட்ட உலகில் கடந்த ஒரு தசாப்த காலமாகவே சிறந்த வீரருக்கான தங்கப் பந்து விருதை மெஸ்ஸியும், றொனால்டோவுமே பெற்று வருகின்றார்கள். தங்கப்பந்து விருதைப் பெறுவதில் குறித்த காலப்பகுதியில் அடித்த கோல்களின் எண்ணிக்கைக்கு அப்பால் அவர்கள் விளையாடும் றியல் மட்ரிட், பார்சிலோனா கழகங்கள் பெற்றுக்கொள்ளும் லாலிகா கிண்ணம் மற்றும் சம்பியன்ஸ் லீக் கிண்ணம் என்பவற்றோடு தத்தமது நாடுகள் சார்பில் பெற்றுக்கொள்ளும் கிண்ணங்களும் தாக்கத்தைச் செலுத்தி வருகின்றன.

றியல் மட்ரிட் கழகம் 2016 / 2017 பருவகாலத்திற்கான லாலிகா கிண்ணத்தையும் சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தையும் ஒருங்கே பெற்றதோடு போர்த்துக்கல் அணி 2016 யூரோ கிண்ணத்தையும் கைப்பற்றியதாலேயே 2017 ஆம் ஆண்டுக்கான தங்கப்பந்து விருது றொனால்டோவுக்கு கிடைத்திருந்தது. அந்தவகையில் இம்முறை லாலிகா கிண்ணத்தை பார்சிலோனா வெல்வது கிட்டத்தட்ட உறுதியாகி உள்ளது. எனவே சம்பியன்ஸ் லீக் தொடரிலும் பார்சிலோனா கிண்ணம் வென்றால் 2018 ஆம் ஆண்டுக்கான தங்கப்பந்து விருது மெஸ்ஸிக்கு கிடைப்பதற்கான வாய்ப்பு கூடுதலாக இருந்திருக்கும்.

ஆனால் இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற சம்பியன்ஸ் லீக் தொடரில் காலிறுதி ஆட்டத்துடன் பார்சிலோனா அணி தோல்வி அடைந்து வெளியேறியதால் மெஸ்ஸிக்கான வாய்ப்பு குறைந்துள்ளது. அதுபோலவே றியல் மட்ரிட், லாலிகா சம்பியன் வாய்ப்பை இழந்தாலும், சம்பியன்ஸ் லீக் தொடரின் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது. ஒருவேளை றியல் மட்ரிட் சம்பியன்ஸ் லீக் தொடரில் கிண்ணம் வென்றால் றொனால்டோவுக்கும் மெஸ்ஸிக்குமான வாய்ப்பும் சமமாக இருக்கும். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் தங்கப்பந்து விருதைத் தீர்மானிக்கும் தொடராக எதிர்வரும் ஜுன் மாதம் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடரே அமையும்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 28.04.2018 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.